KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹ ஏப்ரல் மீ 11உ [No. 15.

OFFICE OF THE R... 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 281
2. எமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B.A., B.L. 283
3. வில்லி பாரத விளக்கம்
T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L. 285
4. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 288
5. தமிழ்ப் பாடம் 290
6. மாறன் பாப் பாவினம்
(நாராயணசாமி ரெட்டியார் அனுப்பிய பிரதி) 292
7. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A, B. L. 294
8. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
A. ஸ்ரீநிவாஸராகவன் B.A. (Hons) 296
9. வர்த்தமானம் 299

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

கலா நிலயம்

வள்ளுவர் வாய்மை.

II

யாதொன்றும் தீமையிலாத சொலல் ஒன்றே வாய்மையாயின், புரைதீர்ந்த நன்மை பயத்தல் இயலாதென்னும் அநுபவ உண்மையால், பொய்ம்மை ஒருபோதும் வாய்மை இடத்த தாகாதென்ற உணர்ச்சிபற்றி வள்ளுவர், மேல் நோக்கிற்கு ஆவது போல் தோன்றுகின்ற போலிப்பயன்களை மறுத்து அவ்விரு குறள்களிலும் கூறியிருத்தலுங் கூடுமென் பதைச் சென்றவாரம் ஆராயலாயினோம். எல்லா விரதங்களிலும் கொல்லா விரதத்திற்கு ஏற்றம் வைத்த சமணர், "வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றுந் தீமையிலாத சொலல்" என்னுங் குறளைத் தம்முடைய ஒத்தாகக் கொள்கின்றனர். பயனைக் கருதாது, மெய்ம்மையை அதன்பொருட்டே மேற்கொண்டு, தன்னுயிர்க்கேனும் அயலுயிர்க்கேனும் கேடாதல் சாக்காடாதல் நேரிடினும் அம்மெய்யலால் உரைத்த லாகாதென்னுங் கொள்கையை யுடைய பிற மதங்களோடு உடன்பாடின்றித் திருவள்ளுவர் கொல்லாமையைத் தலையறமாய் முன்வைத்து, அவ்வறம் இடையூறின்றி நிறைவேறுவதற்கு ஏற்றதாய் அமையாதவெல்லாம் வாய்மை எனப் பாராட்டுவதற் கொத்தனவல்ல வென்று அவர் நவின்றுளாராயின் ஒருகால் இக்குறள்களைச் சமணர் தம்முடைய வோத்தென்று கொண்டாடுவது தக்கதாகலாம். நாயனர் அவ்வாறு கூறவில்லையாகையால் சமணர் இக்குறள்களைத் தம்மதத்திற்கு உரிமையாக்கிக் கொளல் ஏற்றதன்று. வள்ளுவர் கருத்து அதுவாயின் அவர்,"வாய்மையும்பொய்ம்மையிடத்தே புரைசேர்ந்த தீமை பயக்குமெனின்" என்று எதிர்முகமாய்க் கூறியிருப்பார் என் றெண்ணுகின்றோம். அவ்வாறின்றி, முன் நாம் எடுத்துக் காட்டியவண்ணம், "புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்ம்மையும் வாய்மையிடத்த" என்ற வாசகத்தின் தொனிப்பொருளால் பொய்ம்மையாலும் சிலபோது நற்பயன் எய்தஇயலும் என்னும் கொள்கை மறுக்கப்பட்டு நிற்கின்றது. இதற்கு முன்குறளில், 'யாதொன்றும்' என்ற சொற்கள் இருப்பதால், தொனியால் மாத்திரமன்றி உரையாலும் அம்மறுப்புக் குறிக்கப்பெற் றுள்ளதைக் காணலாம். எனின், திருக்குறள் சமண நூல் என்னும் படி இவ்விருகுறள் இருக்கின்றன என்னும் நாணத்தால், அம்மதத்தைச் சேராதார் நையவேண்டா.

இத்துணை நாமிங்கு எடுத்தெழுதியது பெருந்தகைப் புலமைவாய்ந்த திருவள்ளுவர் சமயம் இன்னதென்று வாதிப்பதற்காக வன்று. அவர் மொழிகளின் ஆழத்தைக் காட்டிக் கடுகைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டிய பெருமையைப் பாராட்டுவதற்கு மன்று. அவர் திருவாய்மலர்ந்தருளிய செய்யுள்களில் சிலஇக்காலத்திற் கேற்றன அல்லவென்றேனும் வேறுஎக்காரணங்களேனும் கூறி, அன்னவைகளை நூலினின்று

விலக்க நினைக்குமுன் எவ்வளவு தூரம் ஆராயவேண்டியது அவசியமாகின்றது என்பதை வற்புறுத்துதற்கேயாம்.

வாய்மையறமே யாவற்றினும் உயர்ந்ததாய் மற்றவெலாம் தன்னேவல் கேட்கத் தனியரசு பெற்றதோ, மற்று வேறொறத்திற்கு வாய்மை இடையூறாய் அமையுமெனின் இது உய்த்தவழி செல்லல் கடன் அன்று என்பதே தக்கதோ, என்னுமிவைகளை ஆராய்ந்து உண்மைநிலை எதுவென்று உரைத்தல் எம்மனோர் இயற்றுதற் கரியதொரு விடயமாம். இதுபற்றித் திருவள்ளுவர் எக்கருத்துக் கொண்டிருக்கின்றனர் என்று நிச்சயமாகச் சொல்லஇயலாதபடி நாம் எடுத்தாண்ட அவ்விருகுறள்கள் அமைந்திருக்கின்ற தன்மையைக் காட்டினேம். பரிமேலழகர் உரைகண்டபடி வாய்மையால் ஒருபோது தீமையும், பொய்ம்மையால் ஒருபோது நன்மையும் விளைவதற்கு இயலும் என்று வள்ளுவர் மதித்தாரோ, அல்லது நாம் இங்கு ஐயுற்றபடி வாய்மையால் தீமையும் பொய்ம்மையால் நன்மையும் ஒருபோதும் விளையுமென எளிதில் எண்ணிவிட வேண்டாவென் றுறுதிகூறினரோ அறியேம். இங்கிலையில், வள்ளுவரைப்போல் காலத்திற்குந்தேயத்திற்கும் கட்டுப்படாதவராய் உலகத்திற்கே நிரந்தர உரிமைவாய்ந்த உத்தமவித்தகர் வேறு எவரேனும் இவ்விடயத்தில் சிந்தைசெலுத்திச் சில சொற்கள் சொல்லியிருப்பாராயின் அவைகளை இணைவைத்து ஒப்புநோக்குதல் நேரிதாகும்.

பாரஸீகக் கவிகளுள் மேன்மையுற்று விளங்கிய சாதி (Sa-di)என்பவர் இற்றைக்கு எழுநூற்றைம்பது வருடங்களுக்குமுன் பிறந்தவர் அவர் இளமையில் மகம்மதியர் வேதமாகிய கொரானை ஆழ்ந்து கற்றுத் தன் சிந்தனையெலாம் ஆண்டவன்பால் செலுத்தி அவ்விஸ்லாம் மதத்திற்குரிய அமைதித்தன்மை வாய்ந்தவரானார். ஆயினும், சிறிதுகாலத்திற்குள் அவர் மகம்மது நபியின் மதத்திலிருந்து மாறி ஸூபி மதத்தின் கொள்கையை மேற்கொண்டவரானார். இப் பிரபஞ்சத்திலுள்ள சராசரங்களின் தொகுதியே பரம்பொருள் என்றும், தனித்தனி வஸ்துக்கள் அப்பரம்பொருளின் தோற்றங்களே என்றும் இந்து மதத்தில் அடங்கியிருக்கின்ற கொள்கையைக் கொண்டுள்ளது அந்த ஸூபி என்னும் மதமும் (Sufism). இம்மதத்தின் சார்பினால் தன் ஆன்மபந்தங்கள் நீங்கி விடுதலையடைந்தோர் உணர்ச்சி, உடையவரானார். ஆகிக் கல்விகேள்விகளில் முதிர்ந்து உலகாநுபவமும் எய்தவேண்டும் என்னும் விருப்பினால் நாற்பதாவது வயதிற் புறப்பட்டு,இந்தியா அரேபியா சிரியா ஆப்ரிக்கா முதலியநாடுகளில் முப்பதுவருடகாலம் சஞ்சாரம் செய்து ஆங்காங்குப் போதிக்கவேண்டியவர்களுக்குப் போதித்தும் கற்பதற்குரியவர்களிடத்தில் கற்றும், அடிமையாகக்கூடச் சிலகாலம் உழைத்தும், எழுபதாவது வயதில் ஷிராஸ் என்னும் தன்னூர்க்கு மீண்டனர். மீண்டு அழகிய மலர்வனமொன்று அமைத்துக்கொண்டு அதனிடையே, தான் இதுகாறும் கற்றதும் கேட்டதும் கண்டதும் யாவையும் நுனித்துணர்ந்து ஆயும் சிந்தையராய் முப்பத்தெட்டு வருடகாலம் வசித்துவந்தார். இவ்வாறு வசித்துவரும் நாளில், அரசரைப்பற்றியும் முனிவரைப்பற்றியும் மனத்திருப்தியைப்பற்றியும், மௌனமாயிருப்பதன் மேன்மையைப்பற்றியும், காதலைப்பற்றியும், இளமையைப்பற்றியும் முதுமையைப்பற்றியும், கல்வியைப் பற்றியும்,மாந்தர் தொகுதியின் கடமையைப்பற்றியும் அவர் உள்ளத்தில் அவ்வப்போது திரண்டெழுந்த உண்மைகளைச் சேர்த்து ஒருநூலாக எழுதிவந்தனர்.

'ரோஜா வனம்' என்ற பொருள் உடைய குலிஸ்தான் என்னும் பெயரை அந்நூலிற்கு அவர் இட்டனர்.

நூற்றெட்டுவயது நிறைவாழ்வு வாழ்ந்த இந்தச் சாதி என்னும் பாரஸீகப்புலவர் மேற்கண்டவாறு தன்னுடைய அறிவையெல்லாம் செலுத்தி அனேக ஆண்டுகள் ஆர அமர ஆராய்ந்து தந்த குலிஸ்தான் என்னும் நூலில் முதல் விஷயமாக வாய்மையின் இலக்கணம் எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றது. இவர் தன்னுடைய கருத்துக்களைச் சிறுசிறு சம்பவங்கள் வாயிலாக விளக்குவது வழக்கம். அவ்வாறே இதனையும் விளக்கி யிருக்கின்றார். அப்பாகத்தை இங்கு மொழிபெயர்த்துத் தருவோம்:—

"போரில் கைதியான ஒருவனைக் கொன்றுவிடும்படி ஓர்அரசன் கட்டளையிட்டான். நிர்க்கதியாயிருந்த அவ்வல்வினையோன் என் செய்வான். உயிலைக்கைகழுவிவிட்டபின் எவனும் தன் மனத்தில் இருப்பதைச் சொல்லத் துணிந்து விடுவானன்றோ. மூலையில் அகப்பட்டுக்கொண்ட பூனையும் நாயின்மீது சீறிப்பாய்வது இயல்பு. ஓடித் தப்புவதற்கு ஒன்றும் வழியற்றபோது வெட்டவந்த வாளின் கூரிய நுனியையும், வகைதோன்றாது திகைக்குமொருவன் கைகளால் பற்றிக்கொள்வான். இந்த இயற்கைக்கு இணங்க, கொலைத் தண்டனை விதிக்கப்பெற்ற அக்கைதியும் அரசனைத் தன் பாஷையில் வாய்வரம்பிகந்து இழிந்த சில சொற்களால் வைது நிந்தித்தனன். அந்தப் பாஷையை அறிந்திராத அரசன்,"இவன் யாது புகல்கின்றனன்" என்று தன் அவைக்கண் இருந்தோரை நோக்கி வினவ, நற்குணம் வாய்ந்தவோர் மந்திரி, "வேந்தே, இவன் தன் நிலைமையைத் தெரிவித்துக்கொண்டு, 'ஓங்கி எழும் வெஞ்சினத்தைக் காத்து எவ்வுயிரையும் அருளொடு அளிப்பவர்களுக்கே துறக்கநாடு உரியதாகும்' என்று கூறுகின்றான்" எனச் செப்பினன். இதுகேட்ட வரசன் அப்பேதைக் கைதியின்பால் இரக்கங்கொண்டு 'அவன் இரத்தத்தைச் சிந்தவேண்டா' என்று முன் விதித்த தண்டனையை மாற்றிவிட்டான். அப்பொழுது, முன் உரைத்த மந்திரியோடு இகல் கொண்டிருந்த இன்னொரு மந்திரி, "உண்மை யல்லாதனவற்றை அரசன் முன் சொல்வது எம்மனைய மந்திரிகட்கு அழகன்று-தலைவ, இவனுன்னைச் சொல்லத்தகாத வார்த்தைகளால் பழித்துப் பேசினன்" என்று நிகழ்ந்ததை எடுத்துச் சாற்றினன். வேந்தனு மிதுகேட்டு வெகுளியோடு மறுபுறந் திரும்பி, நீயுரைத்த வாய்மையிலும் அவன் புகன்ற பொய்ம்மைக்கே யான் மகிழ்ந்தேன், ஏனெனில், நன்னய மொழிகளாய் அவை தோன்றின. நின்னுரையோ கொடுமைபற்றிக் கூறியனவாகும். தீ தூழக்கும் வாய்மையிலும் நயம்பயக்கும் பொய்ம்மையே பாராட்டற்பாலதென மூதறிவு மிகவாய்ந்த மேன்மையோர் இயம்பியுள்ளார்" என்று இடித்துரைத்தனன்.

இன்னவிதம் பாரஸீகப்புலவர்தம் கருத்துப் பரிமேலழகர் உரைக்கு மிகநெருங்கி நடப்பதால் வள்ளுவரது உள்ளக்கிடக்கையும் அதுவேயாயிருப்பினும் இருக்கலாம். யாதொன்றுந் தீமையிலாத சொலற்கு முதன்மந்திரியின் வாசகம் உதாரணம் ஆகி, நிகழாதது கூறலும் மெய்ம்மை எனும்படி அவ்வாசகம் நிற்கின்றது.

காலத்தாலும் இடத்தாலும் இத்துணைத் தூரத்திற்கப்பால் வசித்த தென்மொழித்தேவரும் பாரஸீகப்புலவரும் ஒரு கருத்துடையர்போல் காணலாகின்றனர். இத்தகைய வித்தகர் வாசகங்களை நம்மனோர் ஆய்ந்து நல்லுரையன்றென்று கழித்துவிடல் நேரிதோவென அயிர்க்கும் உரிமையைக் கையாண்டு இவ்வளவு செப்பினேம். இன்று நமக்கு நல்லதன்றெனக் காண்கின்ற குறள்களின் உண்மையும் மேன்மையும் நாளையே தோன்றலாம். அதுவரையில் காப்பது கற்றோர் கடன்.

OFFICE OF THE ... MADRAS ... 1929

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

3. விந்தை வலவன்

265 பக்கத் தொடர்ச்சி.

வணிகர் வாழ் வீதியெலாம், அமர்கருதும் படைகளுக்குச் சம்பளச் சுமைகள் கட்டிப் பண்டியினும் ஒட்டகங்கள்மீதும் வேசரியின் முதுகினும் ஏற்றியனுப்பினர். வேதியராயினோர் ஆலயந்தோறும் சயந்தருஞ் செபங்கள் ஓதி அருச்சனை புரிந்தனர். கம்மியத்தெருவிலே போர்க்கலம் புதுக்கினர். மன்னர்குல மேன்மக்கள், வாள் தீட்டினர் தீட்டினர். வேல் வடித்தவர் வடித்தார். தண்டினுக்குப் பூண் இட்டவர் இட்டனர். அம்புகள் ஆய்ந்தவர் ஆய்ந்தார். கவசகேடகங்கள் துளக்கினர் துளக்கினர். பட்டுடை உடுத்தார் சிலர். அங்கி தரித்தார் சிலர். குஞ்சி கோதி முடித்தார் சிலர். காற்கச்சு வீக்கினர் சிலர். கழல் கட்டினர். வஞ்சி சூடினர். மனையின் வாயிலை நண்ணினர். வெற்றியம் பதாகை விரித்தனர்.

'கண்டொடு காய்ச்சிய தீம்பால் அருந்திதைமைந்த' எனப் பரிந்த தாயர் நல்கும் வள்ளமேந்தித் தம் கண் சொரிந்த நீர் அதனில் கலக்காவண்ணம் தாழ்வாரும்; 'கை சோர்ந்தபின்னும் சமர்தனில் மனம் சோர்ந்திடேல்,' எனக் கற்பிக்கும் தந்தையரைத் தொழுவாரும்; 'எந்தாய்நீ மீளுங்கால் யாம் விளையாடப் பிள்ளை வேழம் கொணர்வாயோ' என முன்னின்றிரக்கும் சிறுமக்களைத் தழுவுவாரும்; 'என்னுயிர் நின் கையடைப்பொருள் கொழுந, அதனைநீ காத்துக் கொணர்வது நின் கடன் மறவாய்,' என இரங்கும் மனைவியரை, 'எனதுயிரைத்தான் உன்வயின் வைத்துச் செல்கின்றேனாதலால் சமர்தனில் அதனைத் துறப்பதெங்ஙனம்!' எனத் தேற்றுவாரும்; 'வருமளவு வாழ்வொடு வைகும் வன்மை யிலேன் அன்ப' என உயிர்க்கும் காதலியைக் கண்துடைப்பாரும்; 'போர்க்களம் எத்தூரம் உளது, நீவர எந்நாளாகும், தெய்வ முனைக்குத் துணையாக,' என இதம் உரைக்கும் உற்றவர் நட்டவர்க்கு இனியன பகர்வாரும் ஆகிப் பிரிந்த போராற்றல் பெருவேந்தர் யுத்த சன்னத்தராய்ப் புறப்பட்டனர்.

திருநீற்றுக் காப்பிட்ட நெற்றியர், சிவந்த கண்ணினர், சிடுசிடு வெனச் சிரித்த வாயினர், செழித்த மாலையர், நவமணிப் பூணினர், விதிர்த்த வாளினர், நீடியவில்லினர், கூரியவேலினர், தோமரம் தண்டு தாங்கிய தோளினர், பாய்பரியிற் சிலர், கடகளிற்றிற் சிலர், பொற்றேரிற் சிலர் ஆயினவீரர் இவர், ஏகிய மல்லல் மறுகுதோறும் அந்தணர் மந்திர அக்கதை தூவியும், அணங்கனார் மலர் சொரிந்து ஆலத்தியாட்டியும், மாகதர் புகழ்கமழ் இசை பாடியும் வழியனுப்பலாயினர். வெற்றித் திருவே அந்தரம் புகுந்து களிநடம் புரிந்தாலென்ன அடர்ந்து படர்ந்து ஆகாயத்திலாடிய பன்னிறக் கொடிகளால் கதுவிய இருளை, இக்கொற்ற மன்னவர் அணிந்த இனமணிப் பூண்களின் ஒளிகளே போக்கின.

காக்கைப் புராணம் பாடிய சாபாலப்புலவன் கண்டனன். கால்கொண்டு ஓடியோடி நோக்கினன் படையெழும் பரிசெலாம். நோக்கி, நேர்ந்தது அன்றே தனதெண்ணம் எனத் தேர்ந்தனன். தேர்ந்து, பாட்டாண்ட பார்த்திபன் ஆயினனெனும் உவகை பூத்தனன். புகுந்தனன் தன் மனையகம். இல்லாளை விளித்தனன். "கட்டு சோறு கட்டித்தா, காரியம் உளது. நான் வருங்காலம் பல்லிச்சொல் பார்த்திரு" என்று கூறினன். அவளும், 'போரிடப் போவது புலவற்கு உரியதோ!" எனச் சாபாலன், "போரிடுபவர் பிறர்.ஆனால் சக்கிரவர்த்தியாகப்போகின்றவன்நானே. நீயும் என்பட்டப்பத்தினி யாகின்றாய். பெண்ணே, நீ செய்த பாக்கியமே பாக்கியம்" என்று வியந்து பயணப் பொருள்களெல்லாம் சேகரம் செய்துகொண்டு வெகு விரைவினில் படைகூடிய இடந்தேடிப் போயினன். அருகிருந்த சோலையில் வளர்ந்த பனைமரம் சில 'முட்டைபோல்' மொட்டையாயின. முன் செய்த தீவினையால் இவ் வோலைகள் சாபாலன் சாற்றவிருக்கும் பரணிப்பொதியைச் சுமக்க நேர்ந்தன போலும்.

பகற்பொழுது தீர்வதன்முன் பல்வகைச் சேனையோடு பார்த்திபச் செம்மல்களும் அந்நகரிற்கு அண்மியதொரு பெருவெளியில் சேர்ந்து தொக்கனர். வெஞ்சமரில் தலைமைபூண்டு வெற்றிபெற நடத்தும் புஜங்கன் அங்கு இல்லாதது காண, இச்சைனியத்தினுள் சிறிது சஞ்சலம் உண்டாயது. இன்னதற்குக் காரணம் யாவதோவென, அனைவரும் புத்தியைச் செலுத்தி ஊகிக்க முயன்றனர். திறலாண்மை தங்கிய வேந்தரிற்சில முதன்மையோர் அணித்தலைமை தாமே பெறத் தம்முள் விழைந்தனர். இரவியும் குடபால் இறங்குபவனாயினன். மஞ்சள் பூசிய மாலைக் கிரணம் குடைதலால் தேர்களின் முடிகளும், கொடிகளின் மணிகளும், வள்ளுறை கழித்த வாளும், முத்தலை வேலும், கூரிலைச் சூலமும், அராவிய அம்பின் நுதியும், யானை நுதல் ஓடையும், வாசியின் குசைகளும், பரிசையின் அகலமும், அரசர்தம் அணிகளும் பல்நிற ஒளிகளைப் பொங்கப் போக்கலால் அத்தானை குழுமிய சூழலெல்லாம் வானவில் தரைதனில் தவழ்வது போன்று தோன்றியது.

இவ்வகை வயங்கிய இடம்நோக்கிச் சிறிது தூரத்தில் சங்கொடு காளம் ஊதிச் சிலர் வந்தனர். இவ்வொலி எழும்வழி அப்படையிலுள்ளோர் நோக்கிடக் களிற்றரசும் சீயக்குருளையும் சேர்ந்து நடந்தாலென்னச் சிங்கமுகவேந்தனும் வாசவஇளவலும் வருவது கண்டனர். வருமொலிக்கு எதிரொலியாய்ப் படையினுள்ளும் பெரியதோர் ஆரவாரம் கிளம்பியது. குதிரைகள் கனைத்தன. போதகம் பிளறின. முரசம் அதிர்ந்தன. வீரரெல்லாம் மிடறுகூட்டிச் செயகோஷம் முழங்கினர். இவ்வண்ணம் ஆர்வமுடன் வரவேற்ற அணிதனக் கருகே வேந்தனும் மைந்தனும் நண்ணியவுடன், கையுயர்த்தி யானைகளும், கால்மடித்துக் குதிரைகளும், தலைதாழ்த்திச் சேவகர்களும் வணக்கம் செய்ய, மன்னவன் பரிவினோடும் கைம்மலர் பணித்தருளிச் சில பேசினன்:

"ஆருயிரன்ன வீரர்காள், நம் ஏமாங்கத நாட்டிற்கு இன்று ஓர் இடுக்கண் புகுந்துளது. கடாரத்தவர் படையெடுத்து இப்பண்டைநாட்டினுள் அடிபெயர்த்துவைக்கவும் ஆயது கண்டீர்! வெலற்கரிய நம் படையின் வன்மையை மறந்து வேற்றரசன் போர்புரியத் துணிந்தது இறும்பூது என்று எண்ணுவோர்க்கு ஒன்று கூறுவேன். சச்சந்த வேந்தனைச் சதிசெய்து

இப்புனித பூமியைக் கவர்ந்து ஆண்ட மந்திரிக் கட்டியங்காரன் கால்வழி முற்றிலும் அந்நாள் அற்றதில்லை போலும். தலைவரை விற்றிடும் தந்திரங்களை வளர்க்கும் வண்மையும் இந்நகர் மண்ணிற்கே உண்டோதான்! மற்று, முன்னொன்று நிகழ்ந்ததைப் பின்னும் பின்னும் சாதித்து வைப்பதே சரித்திரச் செய்தியோ! எமக்கு அருந்துணை யாயினன். அமர் பற்பல ஆற்றலோடு வென்று எமக்குத் தந்தவன்! புவிப்பொறை யாற்றுதற்கு ஒருதோள் போன்றவன். உறவினன் ஆதற்கு உற்றவன்—புஜங்கன், புவனேச்வரனது படைதனை நடத்தி நம்பாற் பகைமையோடு வருபவன் ஆயினனன்றே! நாம்வைத்த நம்பிக்கையைக் கொன்று அவன் செய்யும் இக்கொடுமையைக் காண்கின்றேனன்றி அன்னதன் கருத்து யாதென விளங்கிற்றிலை. விச்வாஸகாதகன் இப்புஜங்கன். எனினும், எமக்குற்ற மானமும் அரசும் உமதேயெனத் தனித்தனி ஏற்றுப்போற்றிடும் உத்தமர்காள், மடியினில் ஊர்ந்த மக்களை விலக்கி மண்டமர் தொடர்ந்த தந்தையீர், கொதுகு பறவாமல் துயில்காத்த அன்னைமார் கண் பிசைந்து மனமுளைய நீத்துவந்த மைந்தர்காள், பிரிவறியாப் பெண்டிர்தமைப் பிரிந்தகன்ற கொழுநர்காள், நண்பர்காள், அன்புடையீர், கருதற்கரிய இக்கடும்போர் அப்புஜங்கன் வளர்த்ததாயினும் யானிழைத்த ஒரு பிழையே அன்னதற்கு வித்தாகின்றது என்பதை நும்பால் உரையாது மறைக்கச் சகியேன். வேந்தன் வாய்வரு சொல்லிற்கு எதிர் நினைத்தலுமின்றியே உயிர்வழங்கு மறமுடையீர் நீவிர். ஆயினும், உந்தம் பெருஞ்சோற்றுக் கடன் இறுக்க இன்று நினைத்திலேன். நம் சிறுவன் வாசவன்பால் வாஞ்சையினால் ஒருசிறிது மெய்ம்முறையினின்று விலகி ஒழுகினேம். ஆதலாற்றான் அப்புல்லிய புஜங்கனுக்கும், இரண்டகம் செய்ய இடம் கிடைத்தது. உண்மையைச் சொல்லினேம். இஃதறிந்தும் மேன்மக்காள், நீர் எம்பொருட்டு இச்செருவுள் பட்டிடக் குறிப்பீராயின் குறிமின், இல்லையெனில் விட்டிடுங்கள். மற்று நீர் விட்டிடினும் நுமக்கோர் வசையில்லை. பகுத்தறிவு அயர்ந்து யான்புரிந்தவத் தீவினையே பகைப்படை உய்த்துப் புஜங்கனை இந்நாள் வந்துளது. என் வினைக்கு யானே ஆளாகின்றேன். நம் வளநாடும் இன்னொருவன் ஆளட்டும். மனமிலாவழி நும் மின்னுயிரைத் துறக்க வேண்டா. வயப்படை வதிந்த வீரர்காள், உந்தம் கருத்தி யாவதெனக் கூறுவீர்.''

இன்னவாறு வேந்தன் உரைத்தலும் அத்தானையுள் கலகலவெனப் பேச்சொலி கெழுமியது. அளப்பரிய அரசபக்திவாய்ந்த அம்மாந்தருள் இருமனம் என்பதற்கு இடமேஇல்லை. செய்தபிழை சிறிதுளதென்று, சிங்கமுகனே உரைத்தபோது அப்பிழையும் தமதே என்று எண்ணினர். பிழைதான் உளதெனினும் பார்த்திபனைக் கைவிடநினைத்திலர் இப்புனிதவீரர். அதுவும் தம்மிறை, மைந்தன்பால் ஆசையால் நிகழ்ந்ததென்றபின் அன்னதைப் பாராட்ட இசைபவர் ஆவரோ! பிழையொன்று இழைத்தவன்வேந்தனேயாயினும்அதனால் விளையும் பரிபவத்தைப் போக்குவது பரிசனத்தின் பொறுப்பன்றோ! மறுநெறி நின்ற இம்மன்னவன் மனத்தினால் குற்றமும் செய்திரான் என்பது திண்ணம். சிந்தனை செல்லாமலே செய்தவொரு கருமம் பழுதாய் முடிய, அதனைத் தனது இழுக்கென்று பாவித்துப் பரிகின்றானல்லாது எண்ணித் துணிந்து தீமை செய்பவன் சிங்கமுகனெனக் கனவினில் கேட்டாலும் நகைத்தற்கொத்தது ஒன்றேயாம். வாரணசி சென்றிருந்த பார்ப்பானது மனையைப் புறங்காத்த பாண்டியன் கை குறைக்க நேர்ந்ததும் குற்றமே செய்ததாலோ! என்று இன்னபல சொல்லியும் கேட்டும் தானைவீரர் சிறிதுபோது தம்முள் உசாவினர். இதனிடையில் வாசவன் வேந்தனை நோக்கி "அரசே, நன்னெறி நழுவினுப் எனும் இழிசொல் நீ யாளும் மக்கள்முன் உரைக்கும் வண்ணம், மகன் பிறந்து ஆக்கி வைத்தேன். குமரனைப் பெற்றாயல்லை, கொழுந்தோடிப் படர்ந்த உன் புகழிற்கு இறுதிகண்ட கொடுங் கூற்றையே பெற்றனை கண்டாய். தந்தைக்கு நான் ஆற்றிய உதவி இருந்தவாறு மிகநன்று!'' என்று துன்ப மடைதலும் சிங்கமுகன், "வருந்தேல், மைந்த, வருந்தேல். என்வயின் தோன்றிய பாவத்தாலன்றோ நின்னை எய்தவந்த இன்பமும் இடையூறு அடைகின்றது,'' என்று தேற்றினன். வாசவன் இதற்கு மறுமொழி தருமுன், சேனையிலிருந்து ஒரு செம்மல் எதிர்வந்து இருவரையும் தொழுது ஏனையோரையும் உளப்படுத்திச் சொல்லுவான்:

"வேந்தர் வேந்தே, சிங்கமுகப் பெருமானே, இறைவனது செய்கையைச் சீர்தூக்கும் உரிமை அடியேங்கள் படைத்தேம் அல்லேம். அஃது எம்மரபிற்கு ஒவ்வாதுகாண். வாய்மையின் வைப்பே, நீ பொய்வழி நடந்தாய் என்றுரைத்த பொய்யலாது பொய் யெதுவும் நின்பால் இங்குக் காண்கிலேம். சிற்றறிவுடைய எந்தமைச் சோதிக்கவே இதனை நீ சொன்னவாறு அன்றி வேறில்லை. ஐய, நீ உய்த்தபடி உவந்துசெய்ய எம்முயிரையே நின்னடியில் ஒத்த பணயமாய் வைக்கின்றோம். இனித் தாழ்தலின்றியே நாங்கள் செய்வன விதித்தல் வேண்டும்.''

சிங்கமுகனும் இது கேட்கச் சிறந்ததோர் உவகையன் ஆயினன். அருளொடு நிறைந்த கண்ணருவி பாய உரோமம் பொடித்துப் பத்திநெறி பூண்ட படைஞரை இனிதின் நோக்கி, "ஐயன்மீர், இளைத்த என் மனம் தளிர்க்க அமுதினும் இனியன இசைந்து செப்பினீர். மன்னவன் மாசுபடுதற்கு மனங்கொளா மாண்புடை வள்ளலீர், அரசனுய் அமைந்த பேறு இன்றே பெற்றுளேன். நீவிர் நல்கிய உயிர்ப்பணயத்திற்கு நேராக எனது உயிரிற்கே உயிராய வாசவனை மறுபணயம் வைக்கின்றேன். வேந்தனே உட்படா விபத்தில், தன் மாந்தரைச் செலுத்தினனெனும் வசை வேண்டா. ஆதலால், போர்முனை மார்கொடுக்க நங்குலமைந்தனே நால்வகைச் சேனையும் நயந்து நடத்துவான். இவன் பவுத்திரவிரலில் ஏறுதி மோதிரத்தைச் சூட்டுகின்றேன். ஆயினும், சிறியன் செருக்களம்சென்றறியான். குருதி சுவைத்திலாக் கன்னிவாள் ஏந்தி வருகின்றான். அன்னவனை நும் விறல்வாய்ந்த கைகளில் அடைத்தேன். சீவகன் வழிவந்த எந்தொல்குல முன்னையோர் ஈட்டிய தவமேயென்ன இத்தோன்றலின் தலைகாத்துக் கொணர்வீர்.'' என்றுஓதி வாசவனுக்கு ஏறுதி மோதிரத்தைப் பூட்டுதலும், ஒலித்த வலம்புரியும் சாம்புவும் ஒடுங்க, வீரரெல்லாம் "வாசவப்பெருமகன் வாழி, எங்கோன் சிங்கமுகத் தனிவள்ளல் தேசுடன் வாழி வாழி'' என வாழ்த்தொலி எடுத்தனர். தளகர்த்தனாகிய இளவரசன் மன்னனை வணங்கிப் போர்வீரரைப் பார்த்துத் "தோழர்காள், செங்களம் சென்று எம்பொருட்டுச் சமர்செயத் துணிந்த தீரர்காள், படிறு

உருவாகிய புஜங்கனது செயலறிந்தும் சிந்தனை உணர்ந்திலேன் என என்கோத்தந்தை கூறக்கேட்டீர். புஜங்கன்தன் கருத்தில் கருகிய கொடுமை யானே தெரிந்துளேன். அதை நினைத்த மனம் புழுங்கும், உரைத்த நாவும் பிளக்கும், கேட்ட செவியும் பொசுங்கும். ஆதலால் உமக்கு அதை நவில்வதற்கு ஒல்லேன். மற்று, எனது மருமத்திற்கே உரிய சில செய்திகளும் அப்புஜங்கனது நஞ்சுறை நெஞ்சினில் கலந்திருக்கின்றன. அவைதாம் பிறர்பால் புகல்வன ஆகா. ஆயினும் என்வயினுதல் எந்தைவயினுதல் புன்தொழில் யாதும் இலதென்று என் வாளாணை விளம்புகின்றேன். இனி வம்மின் மித்திரர்காள், வம்மின்,'' என்று கூறினன்.

கூறிய வாசவன், அருகுநின்ற தன் கற்கியின்மீது தாவ நினைத்தான். வேந்தன் அதற்கு ஒவ்வாது, "மைந்த, நெடுந்தூரம் குதிரைமீது உகைத்துப்போதல் ஆகாது. தேரிலே ஊர்ந்து செல்வதே தகுதி. சமர்தனில் உன் இரதத்தைத் திறம்பட நடத்துதற்கு இயன்ற ஒரு சாரதியும் நானே இங்குச் சோதித்து அனுப்புதலும் வேண்டும்,'' என்றப் படைஞர் இருந்த பக்கம் திரும்பி, "இச்சேனையினுள் தேர்கடாவும் தொழில்தனில் முதன்மையோர் எம்முன் வாருங்கள்,'' என அழைத்தனன். எழுவர் எதிர் வந்தனர். சிங்கமுகன் அங்ஙனே ஒரு தேர்ப்பந்தையம் வைத்தான். "இங்கிருக்கும் இரதங்களிற் சிறந்தன எவையென்று ஆய்ந்து, ஏற்ற பரிகளும் பூட்டி, இந்தச் சைன்னியத்தை மும்முறை வலம்செய்து என்னிடம் முதல்வந்து இவ்வாளைப் பெறுபவன் வென்றவன் ஆவான். அன்னவனே தேர்முனையமர்ந்து எந்திருமகன் உயிரைக் காக்கும் உரிமையும் உடையான்... ...'' என்று அரசன் சொல்லிவரும் சமயத்தில், "பெரும, யானுமிப் பந்தயத்தில் புகப் பணித்தியோ?'' என மெல்லிய குரலால் வினவியோர் இளைஞன் முன்தோன்ற, மன்னவன், "மஞ்ச, உன்வயதென்ன, நுண்ணிய நின் உருவென்ன, செண்டாடச் சோர்வடைவாய் மற்றிச் செருக்களம் சேர நினைத்ததேன்? உடல் சிறியையாயினும் உன் வித்தையைக் காட்டுதி,'' என்று விதித்தனன்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

267பக்கத் தொடர்ச்சி

திரௌபதியின்பொருட்டுக் கூடிய வேந்தர் இன்னாரெனக் கைத்தாயர் அவளுக்கு மொழிந்தகாலை, அவளும் தன் பெரிய விழிகளால் அரியாசனத்திருந்த அரசர்களைஉற்று நோக்கினள். அவர்களுள், தன் னுள்ளங்கவர் கள்வன் யாவனெனத் தேடியும் அவன், அவள் கண்களிற் பட்டிலன். இதற்குள் புரவலரும் அவளெழில்நலங் கண்டு சித்திரமொத்துணர்வழிந்து நின்றார்கள். இவளை அடையும்வழி இன்னதெனத் திட்டத்துய்மன் மேடையின்மேலேறி அரசர்களுக்குத் தெரிவித்தான். சுழலுகின்ற சக்கரத்தின்நடுவே அமைக்கப்பட்ட இலக்கொன்றை, யாவனொருவன் வில்லில் நாணேற்றி அம்புதொடுத்து எய்கிறானோ அவனுக்கே தன் தங்கையு முரியளென்று அறிவித்தான். யாவருடைய நல்லுணர்வையும் அழிக்கத்தகுந்த பேரழகினளை அடையும் அவாவினால், அரசர்கள் நாணம் பிரிவுற்றவர்களாகித் தங்களால் இயலாத காரியத்தைச் செய்வான் புக்குத் தோல்வியுற்றவராய்ப் பேதுற்றார்கள். அந்தணர் நடுவேயிருந்த இந்திரன்சிறுவன் எழுந்திருந்து, அரசர்மட்டுமன்றி அந்தணர்குலத்தவன் இவ்விலக்கைவீழ்த்தினால் அன்னவற்கு அணங்கும் மாலை சூட்டுவளோ, என்று வினவினான். பிராம்மணர்கள் வேறுகுலப் பெண்களை மணத்தல் மரபாதலால் அவ்வாறு செய்தற்குத் தடையில்லையென்று அவள் அண்ணனும் விடை பகர்ந்தான். இவ்வகையான சிறுசிறு நிகழ்ச்சிகளாலும் அக்காலத்தில் தற்காலத்தைப்போன்று நெருக்கடியான வருணபேதங்கள் இல்லாமலிருந்தனவென்று வெளியாகிறதன்றோ? பாரதம் மற்றெல்லாக் காப்பியங்களுக்கும் மிகவும் தொன்மையான நூலென்பதற்கும் இது ஒரு பொய்யாக் கரியாம்.

தனக்கு இயைந்த விடைபகர்ந்தனன் என்று குனித்த வீரன், 'வின்மரபிற் சிறந்த நெடுவில்லை யீசன் மேருகிரி யெடுத்ததென்ன விரைவிற் கொண்டான்'. விற்குலத்தில் சிறந்ததான அப்பெரியவில்லைச் சிவன் திரிபுர மெரித்தநாள் மேருகிரியை எடுத்ததுபோல் தானும் எடுத்தான். ஈசன் வில்லை எடுத்ததுபோல் அருச்சுனனும் இவ்வில்லை யெடுத்தான் என்பது உதாரணமாகுமே யொழிய உவமை யாகாது. உவமையென்பது பொருத்தமில்லாத இரண்டு வெவ்வேறான பொருள்களை எடுத்துக்கொண்டு, அவைகளுக்குப் பொருத்தம் கற்பித்துக் கூறுவது. 'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' என்றவிடத்து, இந்திரதனுசு அல்லது வானவில்லைப்போல் பல நிறங்களமைந்து மனிதர் கைவன்மையா லாக்கப்படாத புடவை என, வானவில்லின் நிறத்திற்கும் வனிதையர் ஆடைக்கும் உவமை கூறப்பட்டது. இராமனைப்போல் அருச்சுனன் வில்லை எடுத்தான் என்றால் இராமனுக்கு அருச்சுனன் உவமை யாகமாட்டான் இராமன் தன் கல்லியாணத்தின் போது வில்லெடுத்தது ஒரு உதாரணம் ஆகும். அதேபோல் மலையாகிய பெரியவில்லை ஈசன் எளிதில் எடுத்ததையொப்ப அருச்சுனனும் பிறரால் எடுக்கமுடியாத பெரியவில்லை அலக்ஷியமாய் எடுத்தான் என்று பொருள் சிறந்துதோன்றினும் அது உவமை யாகாது

அருச்சுனன் தன் விற்றிறத்தால் அரிவையை வென்றபின் அரசர்யாவரும் பொறாராய் ஒருங்குகூடி அவனையும் அவனைச் சார்ந்தோரையும் தாக்கினர். அச்சமயம் ஒரு பெரும்போர் விளைந்தது. அதனில் வீமனும் அருச்சுனனுமே முதலாய் நின்று சமர்புரிந்தனர்.

" மறையோருள்ளா
ருருத்துவாய் மடித்தெழுந்து கோகு தட்டிட்
டேன்றிய தண்டெடுத்தி ரோச்சி யுடன்ற வேந்தர்

கருத்துவார் தகவெருக் கொண்டோட வோடக்
கையுரங் காட்டினர் வளர்த்த கனலே யன்னுர்

[பிராம்மணர்கள் கோபங்கொண்டு உதட்டைக் கடித்தெழுந்து தோள்தட்டிக் கைக்கோலா லோச்சி, சண்டையிட வெதிர்த்த அரசர்கள் தங்கள் கருத்தில் மிகவும் அச்சங்கொள்ள, தாங்கள் வேள்வியில் வளர்க்கும் கனலைப்போல் அழன்று, அவர்களை ஓட அடித்துத் தங்கள் கையின் வலிவைக் காட்டினுர்கள்.]

வில்லிபுத்தூராருக்குத் தங் குலத்தாரை உயிர்வித்துக் கூற நல்லதொரு தருணம் வாய்க்க அதனை விடாதவராய்ச் சண்டையிலும் கைத்தண்டால் அவர் வெற்றி பெற்ருரென்று கூறவந்தவிடத்து, மனிதருக்கு இயற்கையிலெழும் கோபம் இத்தன்மையதென்று விளக்கிக் காட்டினுர்.

வளர்த்த கனலே யன்னுர், என்று அவர்களை உவமித்துக் கூறியது சற்றே ஆராயத்தக்கது. அந்தணர் தொழில், வேட்டலாதலால் அவர்கள் தொழிலில் காணப்படும் பொருளொன்றைக் கொண்டே அவர்களுக்கு உவமை காட்டினுர். ஈதொரு விஷயத்தில் இக்கவி யாங்கண்ட மற்றெல்லாக் கவிகளையும் விட மேம்பாடடைந் திருக்கிருர். வில்லியைப்போல் எமக்குத் தெரிந்தவரை, அவரவர் தொழிலுக்கு ஏற்பட்ட வஸ்துக்களைக்கொண்டே அவரவர்கள் செய்வினைக்கு உவமை காட்டும் கவிகள் யாவருமிலர். பின்வரும், காண்டவதகனச் சருக்கத்தில், அக்கினி வேதியன் வடிவுகொண்டு கிருஷ்ணுர்ச்சுனர்கள் முன்னே தோன்றினுன், என்று சொல்லுமிடத்தும் அவ்வாறே உவமைகளைக் காட்டியிருப்பது மிகவும் வியக்கத் தக்கதாயிருக்கின்றது.

இனியபான்முகந் தொழுக்குமாகுதி
யெனவிலங்குமுப் புரிநூலுந்
தனதுவெஞ்சிகைக் கொழுந்தெனப்புறத்
தினிற்ருழ்ந்தசெஞ் சடைக்காடும்
புனிதவெண்புகை மருங்குசுற்றிய
தெனப்புனைந்தவா டையுமாகி
மனிதவேதியர் வடிவுகொண்டவ
ரெதிர்வன்னிவா னவன்வந்தான்

[இனிமையான பாலை மொண்டு அவிஸாகச் சொரிந்தாற்போல் விளங்குகின்ற பூணூலும், தனது சுவாலையின் கொழுந்தைப்போல் பின் தொங்கிய சிவந்த சடைமுடியும், ஓமகுண்டத்தி லிருந்தெழுகின்ற பரிசுத்தமான வெண்புகைபோல் தன் இடையில் சுற்றிய வெள்ளிய ஆடையுமுடையவனுகி மனிதரில் பிராம்மண உருக்கொண்டு அவர்கள் எதிரில் அக்னிதேவன் தோன்றினுன்]

இவ்விடத்தும் பால் ஆகுதி, ஓமகுண்டம், அதிலிருந்தெழும் புகை இவையாவும் பிராம்மணர்கள் தொழிலுக்குரியன்வாய் இருத்தல் காண்க.

இன்னும் விராடபருவத்தில் நிரைமீட்சிச் சருக்கத்தில் துரியோதனுதியோர் கவர்ந்துசென்ற பசுக்கூட்டங்களை அருச்சுனன் வெம்போர் புரிந்து மீட்டான் என்றவிடத்துக் கூறியிருக்கும் உவமையும் இடைக்குலத்தார்க்கு ஏற்ற பொருள்களைக்கொண்டே கூறியிருப்பதை இங்கே எடுத்துக் கூறுவோம்.

முந்த வான்றெரு மீட்டலு முற்கவர் பொதுவர்
வெந்த நெய்யென வாரவ மடங்கினர் மிகவு
மந்த நெய்யினிற் பாற்றுளி யுகுத்தென வார்த்தார்
வந்த மச்சர்கோ மகனெடும் வந்தகோ பாலர்.

[முன் துரியோதனன் ஆவைக் கவர்ந்தபொழுது, இடையர் அடுப்பின் தீயில் வெந்த நெய்யைப்போல் மனங் கொதித்தும் அடங்கிக்கிடந்தார்கள்; பின்னுல் அருச்சுனன் பசுக்களை மீட்டபோது மச்சராஜனது பிள்ளையான உத்தரனுேடு வந்த கோபாலர்கள் அந்தக் கொதிக்கும் நெய்யில் இரண்டொருதுளிப் பாலைத் தெளித்தால் அது எவ்வாறு ஆரவாரத்தோடு பொங்குமோ அதேபோல் மிகவும் ஆரவாரித்தார்கள்.]

இவ்விடத்தும் உவமையின் பொருத்தம் மிகவும் கொண்டாடத் தக்கதா யிருக்கிறதல்லவா?

பீமார்ச்சுனரோடு சண்டைசெய்ய ஆற்ருதவராகிக் கன்னசல்லியர் தோற்று,

வென்ருலுந் தோற்ருலும் வசையே வெம்போர்
வேதியரோ டேற்றலென மீண்டு போனுர்.

பிராம்மணர்களோடு சண்டையிட்டு வென்ருலும் நமக்குப் புகழின்றி வசைதான் கிடைக்கும்; அவர்களிடம் தோற்றுவிட்டாலும் நமக்கு நாணமே யொழிய வேறில்லையென்று சொல்லி ஓடிப்போனுர்கள்.

தனக்கென் றேற்படுத்திய சுயம்வரத்தில், மாதொருத்தி தன் மனத்திற்கியைந்த மணுளனை வரித்தபின்னர், மாலைசூட்டப்பெற்ற மன்னனுேடு மற்றவர்மலைதல் தவறென்று நமக்குத் தோன்றினபோதிலும் அது அக்காலத்திய வழக்கமொன்றைக் குறித்து நிற்கிறதென்பதை நாம் அறியவேண்டும். பண்டைக்காலத்தில் ஆரியர், திராவிடர், மங்கோலியர் முதலான வகுப்பினர்கள் ஒரே இடத்தில் நிலையா யிருந்ததில்லை. இவர்கள் யாவரும் திபத்துக்கு வடக்கே யுள்ள பீடபூமியாகிய ஆசியாக்கண்டத்தின் நடுப்பாகத்திலிருந்து வந்தவர்களென்று சில சரித்திரகாரரும், இன்னும் அதற்கு வடக்கேயுள்ள பனிக்கட்டிகள் உறைந்து நிலம் உழுவதாற் பயனைத்தராத நாடுகளிலிருந்து வந்தவர்களென்று வேறு சில சரித்திரகாரர்களும் எண்ணுகிருர்கள். இப்படிப்பட்டவர்கள், வளப்பம் பொருந்திய நாடுகளைத் தேடித் தங்கள் செல்வமாகிய ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு கூட்டங் கூட்டமாய்த் திரிந்து வந்தார்கள். நாடோடிக ளானபடியால் அக்கூட்டங்களில் பெண்மக்கள் மிகுதியாயிருப்பதில்லை. ஆகையால் நீர்நிலைகள் நிறைந்த நல்லதொரு நாட்டில் குடியேறிய பின்னர்த் தங்களுக்கு வேண்டிய மனைவிமார்களை, அயல்தேசத்திற் புகுந்து கவர்ந்துசெல்வது அன்னுர் வழக்கமா யிருந்தது. இதுவே சுயம்வர காலத்துச் சண்டையென மாறியது.

உலகம் நாகரிகம் அடையாத காலத்தில் வாலி சொன்னதுபோல்,

ஐய நுங்கள ருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்னெமைத் தேமலர் மேலவன்
எய்தி னெய்திய தாக வியற்றினன்
மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய்

[ஐயா, உங்கள் அருமையான குலத்தில் கற்பின்திறத்தோடு தங்கள்கணவர்க்கு மனமொழிமெய்களாலும்பொய்க்காத பெண்களுக்கமைந்த சேர்க்கையைப்போல எங்களைப் பிரம்மா செய்திலன்; எதிர்ப்பட்டது எதிர்ப்பட்டவாறே அமையும்படி இயற்றினுன்]

[பகைவர்களைக் கொல்வதால்நிணமும் கொழுப்பும் கொண்ட சக்காயுதத்தை யுடையவனே, எங்களுக்கு வேதத்திற் சொல்லப்பட்டதுபோல் திருமணங் கிடையாது; அவரவர்கள் உணர்ச்சி எவரெவர் வழிச் செல்கின்றதோ அதுவே அவரவர்களுக்கு இயைந்த நல்ல மணவொழுக்கமாய் அமைவதல்லாமல் உயர்குலத்திற்கேற்ற சிறந்த குணங்கள் எங்களிடத்திற் காணப்படா]

தலைவன் தலைவியர் அவரவர்கள் உணர்வு சென்ற வழியே அமைந்து நின்ருர்கள். தற்காலத்திற்கொத்த சடங்குகளும் நிர்ணயங்களும் அக்காலத்திற் கிடையா. பின்னுள் ஒருத்தி ஒரே குடும்பத்துள்ளாரையே மணத்தல் உண்டாயிற்றென்று முன்னே சொன்னேம். அக்காலத்திய நாகரிகத்தை உணர்த்தும் இக்கதை பின்னுல் எழுதவந்தவர்களுக்கு ஒருவித அருவருப்பைத் தந்தது. அதனுல் இதனை விளக்குவதற்குச் சில கட்டுக்கதைகளைப் புனையவேண்டிய தாயிற்று. திரௌபதியை வீட்டிற்கு அழைத்துச்சென்ற வீரர்கள், அவளைப் புறங்கடை நிறுத்தித் தம் அன்னைக்குத் தாங்கள் ஒரு ஐயம் அல்லது பிச்சையைக் கொணர்ந்துள்ளதாக அறிவித்தார்களாம். தாங்கள் மேற்கொண்ட குலத்திற்கேற்பப் பிச்சையெடுத்துவந்த வழுதை 'ஐவீரும் சேரஉண்ணுங்கள்' என்று அன்னை உள்ளிருந்தபடியே உத்தரவளித்தாள்.

அன்றிலக் கெய்த கோவுந்
துணைவரு மான வெம்போர்
வென்றுகொற் றவையோ டொக்கு
மின்னிடைப் பொன்னுந் தாமும்
சென்றுமட் கலஞ்செய் கம்மி
செழுமனை முன்றி லெய்தி
யின்றுபெற் றனமோ ரைய
மென்செய்வ திதனை யென்ருர்.
உள்ளிருந் தன்னை மைந்த
ருரைத்தசொற் கேட்டுத் தேவர்
தெள்ளமு தென்ன மக்காள்
சேரநீ ரருந்து மென்னப்
புள்ளின மொடுங்கு மாலைப்
பொழுதிவள் புறப்ப ரெய்திக்
கள்ளவிழ் கூந்த லாளைக்
கரும்பென விரும்பிக் கண்டாள்.

[கொற்றவை-வீரலக்ஷ்மி.பொன்-திரௌபதி.கம்மி-தொழிலாளி, குயவன். முன்றில்- வாசல். ஐயம்.பிச்சை.புள்ளினம்-பறவைக்கூட்டம்.புறம்பரெய்தி-வெளியில்வந்து.கள்-தேன்.

பின்னர்ச் சாயந்திரவேளையில் வெளிவந்து கரும்பன்னுளை விரும்பிக் கண்டு,

என்னினைந் தென்சொன் னேன்மற்
றென்செய்தே னென்று சோரு
மன்னையை வணங்கி நின்சொ
லாரணப் படிய தாகு
நின்னினை வன்று லெங்க
ணெஞ்சிலு நினைவுண் டென்றுன்
றன்னிக ரிலாத கேள்வி
சான்றசீர்த் தரும னென்பான்

என்ன நினைத்து என்ன சொல்லிவிட்டேன் என்று துன்பம் உழலும் அன்னையைக்கண்டு, "உன்சொல் வேதவாக்காகும். உன் வாக்கிலெழுந்ததுபோல் எங்கள் நெஞ்சிலும் அவள்மாட்டுக் காதல் விஞ்சுகிறது" என்று தனக்கொப்பில்லாத கல்விகேள்விகள் நிறைந்த நல்லொழுக்கமுடைய தருமன் சொன்னுன். தருமன் சொன்னவார்த்தை நம்மனத்திற்றுணுக்கமுண்டாக்குமாதலால், அவ்வாறு சொன்னதிற் றவறில்லையென்று வற்புறுத்தும்படி கடையடியில் அவன் கல்வியறிவையும் நல்லொழுக்கத்தையும் அறிவுறுத்திக் காட்டினுர் ஆசிரியர்.

அதோடு அமையாது யாகசேனன் தன் பெண்ணை ஐவருக்கு மணந்துகொடுக்க ஒருப்படானுய் நின்றசமயத்தில், வியாசர் தோன்றி, ஊழ்வினை உருத்துவந்தெய்துமென்று அவனுக்குத் தெளிவிக்கவேண்டி அவளுடைய முற்பிறப்பைக் கூறினுராம். அப்பிறப்பில் அவள் நளாயணி யென்றும், அவள் கணவன் அவள் கற்பைச் சோதிக்கவேண்டிக்குட்டநோயுடைய வடிவங் கொண்டானென்றும், அப்படியிருந்தும் அவள் பத்தினியாகலின் அவன் உண்டுமிகுந்த எச்சிலையே சிறிதும் அருவருப்பின்றி உண்டாளென்றும், ஒரு நாள் அவ்வெச்சிலில் அவனுடைய விரலற்று விழவும் அதையும் பாராளாய் அம்மாதுசிரோமணி விரலையெடுத்துவிட்டு உண்ணக்கண்ட கணவன் அவளுடைய கற்பைப் புகழ்ந்து

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டி

(சிலப்பதிகாரம்)

காமனுக்கும் கிடைக்காத காமர் வனப்பினனுய் வடிவங்கொண்டான். 'காமநோய்கொண்டு இச்சித்த வின்பம் நுகராமலிளைத்த மெய்யாளும்' அவனுடன் கூடி இன்பம் துய்த்தாள். பின் அவனை விடாமல் ஒவ்வொரு பிறப்பிலும், அவன் குன்ருயின் இவள் நதியாயும், அவன் மரமாயின் இவள் கொடியாயும் பிறக்கக் கண்ட மௌத்கல்லியன் அஞ்சினவனுப் அருமாதவமுயல வகன்ருன். அதுகண்டு அவளும் சிவனைநோக்கித் தவஞ்செய்யச் சிவனும் அவள்முன் தோன்றி யாது வேண்டுமென வினவினுர். அவளும் 'பதிம் தேஹி' என்று ஐம்முறை அலறினுள்.

ஐந்தா னனத்தோ னருள்செய்ய வழகின் மிக்கா
ளைந்தான சொல்லாற் கணவற் றருகைய வென்று
ளைந்தான சொல்லா னளித்தான் மற்றவனு முன்னு
ளைந்தான போகமிவ ளெய்தியவா றறிந்தே.

[இவன் தவத்தைக் கொண்டாடி ஐம்முகமுடைய சிவனும் அருள்கூர்ந்து அவள்முன் தோன்ற, அழகின் மிக்க நளாயணி ஐந்துமுறைக் கணவனைத்தருக, கணவனைத்தருக வெனவேண்ட, பஞ்சாக்ஷானுகிய சிவனும் அவள் முன்னுள் ஐம்புலன்களாலானபோகத்தை அடைந்ததையறிந்தே அவ்வாறே அருள் செய்தான்.]

சிவனும் அவளுக்குக் கணவனை அளிக்கக் கங்கையின் மூழ்கி அவளுக் கெதிர்ப்படும் ஆளை அழைத்து வரச் சொன்னுரென்றும், அவளும் அவ்வாறேசென்று கங்கையில் மூழ்கி வெளிவந்த சமயத்தில் இந்திரன் தோன்றினுனென்றும் இப்படிக் கதை வளருகிறது. இவையாவும் ஒருத்தி ஐவரை மணந்ததற்குப் பின்னேர் எழுதிய சமாதானங்களாகும்.

கல்யாணம் நியமித்து வேள்வி செய்து தீவலம் வந்து திரௌபதியும்

கங்குற் பவள வனமீது கடற்ற ரங்கம்
பொங்கித் தரளத் திரள்சிந்திப் பொழியு மாபோ
லங்கிப் புறத்துத் திருக்காப் பணியங் கையோடு
செங்கட் கரிய குழலாள் பொரிசிந்தி ஞளே.

[இரவில் பவளக்காட்டின்மேற் கடலலையானது பொங்கி முத்தின் கூட்டத்தைச் சிந்திப் பொழிவதுபோல, சிவந்த நிறமுடைய நெருப்பின் புறத்துநின்று காப்பணிந்த கையானான சிவந்த கண்ணும் கரிய குழலுமுடைய திரௌபதி பொரி சிந்திஞள்.]

இரவிற் கடற்குக் கிளர்ச்சி அதிகமாதலால் கங்குல் என்று செய்யுள் ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் கடற்ற ரங்கத்திற்கு உவமை அங்கையாகிறது. கடலைப்போல் வாரி அளிக்க அளிக்கக் குறையாத நித்தில முடைய கைபோலும்.

இவ்வாறு முதலில் தருமன்மணந்தான். பின்
'வடமீனிகர் கற்பினளை
அவ்வாறு மற்றையொரு நால்வருமன்று வேட்டார்.

அவ்வாறே மற்றைய நால்வரும் அருந்ததிக்கற்பினளை மணந்தார். அச்செய்கை குறைபாடிலது என்று தோற்றுவிக்கக் கவி 'வடமீனிகர் கற்பினள்' என்று திரௌபதியைச் சிறப்பித்துக் கூறுகிருர். இந்தப்படி நமது கவிகள் உள்ளதை உள்ளவாறு கூருமற் புனைந்துரைத்துக் கூறுவதனல் நமது நாட்டில் சரித்திர உணர்ச்சி குன்றிப்போய் நாட்டில் நடந்தேறிய விஷயங்களினுண்மை இன்னதென்த் தெரிந்துகொள்வதற் கில்லாமற் போய்விட்டது. கம்பரும் இவ்வாறே வால்மீகி இராமாயணத்திற் கூறப்பட்டவைகளையும், அவை தன்மனத்திற்குப்பொருந்தாமல் அவர்காலத்து நாகரிகத்திற்கு ஏற்காது போயின் அவைகளை மறைத்துத் தன் கவித்திறத்தால் ஏதோஒன்றைக் கற்பித்து அநேக விடங்களில் எழுதிவைத்தார். மேலே கல்லியாணச் சடங்குகளிலும், பொரி முதலியன சொரிதல் மஹாபாரதம் நடந்தேறிய காலத்தில் இருந்த சடங்குகள் என்று சொல்வதற்கில்லை. அவை வில்லிபுத்தூரர் காலத்தில் வழங்கிய முறைகளே யொழிய வேறில்லை. இராமாயண காலத்திலேயே 'பாணிம் கிருஹ்ணீஷ்வ பாணினும்' என்று கைபிடித்தலே முக்கிய சடங்காயிருந்தது

பாண்டவர் மீண்டுந் தோன்றினர் எனக்கேட்ட துரியோதனன் தன்துணைவர் மூவரொடும் அவர்கள் மேற் படையெடுத்தான். அப்படையை அருச்சுனனும் சிதறவடித்தான். பிறகு திருதாஷ்டிரனும் அவர்களுக்கு அவர்களூரை நல்கினன்.

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

6. செங்கல்பட்டு ஜில்லாச் சிவஸ்தல யாத்திரை.

அப்பர் வரவையறிந்த திருவொற்றியூர் நகரவாசிகள் அந்நகரை யலங்கரித்து வரவேற்றனர். திருக்கோயிலில் புகுந்த திருநாவுக்கரசு "வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கும்" என்னும் திருத்தாண்டகம்பாடி, அத்திருப்பதியின் நெய்தல்நில வர்ணனை விவரித்துப் பரவலானர். "ஒளிதிகழும் ஒற்றியூர்" ஞானவொளியும் பெற்ற வூரெனப் பாடினர் *.

270பக்கத் தொடர்ச்சி

இத்திருப்பதியில் மேற்கண்ட திருத்தாண்டகமும், பத்து பாசுரங்களமைந்த ஒரு திருநேரிசையும், பதினொரு பாசுரமுடைய ஒரு திருவிருத்தப் பதிகமும், பத்து பாசுரங்களுள்ள ஒரு திருக்குறுந்தொகையும் பாடியுளர். மற்ரொரு திருநேரிசையில் இரண்டு பதிகங்களே வான்மீகத்திற் கிரை யாகாதன. இப்பதிகங்கள் ஞானயோகத்தை ஒரு சார்பு விவரித்தும் மற்ரொரு சார்பில் நெய்தற்றிணை இலக்கணமும் காட்டும்.

இப்பதிகங்களால் திருவொற்றியூர், இச்சென்னைப் பட்டணம் உரு ஏற்படுவதற்கு முன்னர், ஒரு திவ்ய நகராய் விளங்கியதென்றும், அந்நகரைச் சுற்றிலும் காடுக ளிருந்தனவென்றும், அந்நகரில் அந்தணர் நிறைந்திருந்ததால் வேள்விகளும் மறையோதலும் எங்கும் காணலாமென்றும், மரக்கலங்கள் பல கடலிற் செல்லும் வர்த்தக ஸ்தலமென்றும் அறிகின்ருேம்

திருநாவுக்கரசுநாயனர் சில நாள் திருவொற்றியூரிலிருந்து அருகிலுள்ள சிவஸ்தலங்களைப் பணிந்து பின்னர்த் திருப்பாசூர் வந்தனர். பாசூர்மேய பரஞ்சுடரைப் பாடிய திருக்குறுந்தொகை ஒன்றும், திருத்தாண்டகம் ஒன்றும் திருமுறைகளிற் காணலாம். இத்திருக்குறுந்தொகையில் கரிகால சோழனுக்குப் பகைவனகிய ஒரு குறுநிலமன்னனுக்குச் சார்பாகச்சமணர்கள் ஒரு பாம்பைக் குடத்திலடைத்து அச்சோழனுக்கு அனுப்பியநாளில், சிவபெருமான் சோழனுக்கு உதவியாக அப்பெரும் பாம்பை ஆட்டின திருவிளையாடல் குறிக்கப் பெற்றிருக்கின்றதைச் சில பாசுரங்களிற் காணலாம் *. இப்பதியில் பாடிய திருத்தாண்டகம் கடவுள் இயற்கைவடிவில் இயங்கும் இலக்கணம் நன்கு விளக்கும் *. இத்தலத்தில் † பாடிய ¶ திருநேரிசைத் திருப்பதிகம் மறைந்தது.

7. சித்தூர் ஜில்லாத் திருப்பதிகளிற் செய்த யாத்திரை.

திருப்பாசூர் விட்டபின்னர் அப்பர் பழையனூர் ‡ திருவாலங்காட்டை யடைந்தனர். அவ்விடத்தில் "சின்மாத்திரமா யுள்ளவெறும் சிவனே திகழ்வான் யாதிற்கும், முன்மாத்திரம் வேறில்லை முற்றும் அவனே" என்னும் சத்தியத்தை விளக்கிய ஒரு திருத்தாண்டகப் பதிகமும், $ ஆளுடைய அண்ணலுக்குப் பத்தர்தம் பாவம் தீர்த்தலே தொழிலென விளக்கிக் காட்டும் ஒரு திருநேரிசைப் பதிகமும் பாடியருளினர்

இவ்விரு பதிகங்கள் திருமுறைகளில் உள்ளவை. பல பதிகங்கள் அப்பர் பாடியதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். அவையாவும் மறைந்து போயின.

திருவாலக்காட்டில் சிலநாள் திருப்பணிகள்செய்து வடக்கு திசையிலுள்ள ஸ்தலங்களைத் தரிசிக்கச் சென்ருர். தற்கால நாகரிகத்திலும் சீர்பெருத காடுகளும் மலைகளும் இப்பாரிசத்தில் உள. இவ்வழியாய் அப்பர் திருக்காளத்திக்குச் சென்றது மிகவும் அற்புதமானதே. * சுவர்ண முகியென்று வழங்குகின்ற பொன்முகலியில் மூழ்கி அவ்வாற்றினின்றே காளத்திமலைக் கொழுந்தைத் திருத்தாண்டக விருத்தங்களாற் பாடினர். "காளத்திய னவனெங் கண்ணுள்ளானே" என்னும் † பாசுரங்களமைந்த அத்திருத்தாண்டகம் ஒன்றே திருமுறைகளில் காணக்கூடிய அவர் பதிகமாகும்.

பின்னர், மலைமேற் சென்று கண்ணப்பர் அடிவணங்கி, அம்மலையில் பல திருப்பணிகள் செய்து சில நாள் கழிந்த பின்னர்த் திருக்கையிலையை அடைந்து அர்த்நாரீச்வர கோலம் தரிசிக்கவிரும்பிக் ‡ காளத்தியென்னும் அக்காலத் தமிழ் எல்லையைக் கடந்து வடதேசம் செல்வாராயினர்.

8. அப்பர் வடதேச யாத்திரை.

திருக்காளத்தியில் திருநாவுக்கரசுநாயனர் திருப்பணிகள் செய்யுங்காலை அவருக்கு ஓர் பேரவா உண்டாயிற்று. அதாவது, சிவபெருமான் திருக்கயிலாயத்தில் வீற்றிருக்கும் ஒப்பற்ற திருக்கோலத்தைக் காணவேண்டுமென்ற விருப்பமே. (கயிலையை அடைந்து அவ்விடத்திலேயே நிலைக்க வேண்டுமென்கிற எண்ணமன்று). திருக்கைலையில் வழிபட்டுப் பரமன் திருக்கோலத்தைக் கண்டு மீளவேண்டுமென்கிற காதல் நிறைந்தவராய்ப் பற்பல வடதேச ஆறுகள் மலைகள் வனந்திரங்கள் கடந்து முடிவில் ஸ்ரீசைலம் என்று வழங்கும் திருப்பதம் * வந்தனர். இது அக்காலத்தில் கயிலைமலைக்கு இரண்டாவதெனச் சொல்லப்படும் "திருச்சிலம்பு" என்பர். தெலுங்கு நாட்டின் வட எல்லையாயு மிருந்தது.

மல்லிகார்ச்சுனமென்றும் வழங்கும் இத்திருப்பதியில் திருநாவுக்கரசுநாயனர் பாடிய திருநேரிசைப் பதிகம் ஒன்றே திருமுறைகளில் காண்கின்ருேம். அதிலுள்ள பத்து பாசுரங்களும் பரமன் "பருப்பதம் நோக்கினரே" என்னும் முடிவுகள் பெற்றுள்ளன. இப்பாசுரங்கள் இத்தலபுராண சங்கிரமமெனக் காணப்படுகின்றன.

திருப்பருப்பதமும் தெலுங்குஎல்லையும் கடந்து கன்னட தேசத்திலுள்ள பல வனங்களையும் நதிகளை

---

* i மத்தமா களியானை யுரிவை போர்த்து
  வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
  பேதையரை யச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கடாம் பலருடனே கூடிப் பாடிப்
  பயின்றிருக்கு மூரேதோ பணியீ ரென்ன
ஒத்தமைந்த வுத்தரநா ளீர்த்த மாக
  வொளிதிகழு மொற்றியூ ரென்கின் றூரே—5.
ii வல்லராய் வானவர்க ளெல்லாங் கூடி
  வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணே மென்ன
  வெவ்வாற்ரு லெவ்வகையாற் காண மாட்டார்
நல்லார்க ளுன்மறையோர் கூடி நேடி
  நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைதான் றிரையேறி யோத மீளும்
  ஒளிதிகழும் ஒற்றியூ ரென்கின் றூரே —7
—திருவொற்றியூர்-திருத்தாண்டகம்.

* 1. வெற்றி யூருறை வேதிய ரவர்நல்
ஒற்றி யேறுகர் தேறு மொருவனர்
நெற்றிக் கண்ணினர் நீள வந்தனைப்
பற்றி யாட்டுவர் பாசு ரடிகளே —4
2. சாம்பல் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன் மூநெரு தேறு மொருவனர்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்த்
பாம்பு மாட்டுவர் பாசு ரடிகளே —(9)
—திருப்பாசூர்—திருக்குறுந்தொகை.

* தடவரைக ளேழுமாய்க் காற்ருய்த் தீயாய்த்
  தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சி யாகிக்
கடல்வலயம் சூழ்ந்ததோர் ஞால மாகி
  காண்கின்ற கதிரவனு மதியு மாகிக்
குடமுழவச் சதிவழியே யனல்கை யேந்திக்
  கூத்தாட வல்ல குழக ஞகிப்
படவரவொன் றதுவாட்டிப் பாசூர் மேய
  பரஞ்சடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

†. இது திருவள்ளூர் ரயில்வேஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 5 மைலில் உள்ளது.

¶ முந்நீமூ வெயிலெய்த முதல்வனரென வெடுத்துச்
சிந்தை கரைந்துருகு திருக்குறுந் தொகையும் தாண்டகமும்
சந்த நிறைந்த நேரிசையு முதலான தமிழ் பாடி
எந்தையர் திருவருள்பெற் றேகுவார் வாகீசர்
—பெரிய புராணம் 340.

‡. திருவாலங்காடு ரயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் 5 மைலில் வடக்கே யுள்ளது.

$ அல்லும் பகலுமாய் நின்ருர் தாமே
  யந்தியும் சந்தியுமாய் நின்ருர் தாமே
சொல்லும் பொருளெலா மானுர் தாமே
  தோத்திரமும் சாத்திரமு மானுர் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானுர் தாமே.
  பழனைப் பதியா வுடையார் தாமே
செல்லு நெறிகாட்ட வல்லார் தாமே
  திருவாலங் காடுடைய செல்வர் தாமே
—திருவாலங்காடு-திருத்தாண்டகம் 5.

*முகலி என்பது தெலுங்கில் தாழம்பூ என்பதின் நாமம். சுவர்ணமுகலி என்பது (செந்தாழை) மஞ்சள் நிறமுள்ள ஒருவித மணம் நிறைந்த தாழை. இந்நதிக்கரையில் செந்தாழை விசேடத்தால் அது சுவர்ணமுகலி என்னும் பெயர் பெற்றிருக்கலாம். "முகி" என்பது "முகலி" என்பதின் மரூஉ என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

† இதைப்பற்றிப் பின்னர்வரும்.

‡ சம்பந்தர் காளத்தி சென்ற பின்னர், வடநாட்டுக்குப் போகக்கூடாமையால் அவ்விடத்தினின்றே உத்தர கைலாசம், திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திரநீலப் பருப்பதம் முதலிய தலங்களை வணங்கினர் என்றும், அதற்குக் காரணம் தமிழ் வழக்கு காளத்திக்கு மேற்கிலும் வடக்கிலும் இன்மை யென்பதும் பெரியோர் கூறுவர்.

* ஸ்ரீபர்வதம் என்றும் வழங்கும். இக்காலத்திலும் இவ்விடத்திற்கு யாத்திரை செய்தல் மிகவும் கடினமான காரியமாகும். மார்க்கர்பூர் ரோட்டிலிருந்து மோடார் பஸ்ஸில் போகலாம். நந்தியால் ஸ்டேஷன் மார்க்கமாயும் செல்லலாம். சிவராத்திரி உற்சவத்திற்கே ஜனங்கள் நடத்தல் காணக்கூடும். மற்றைய காலங்களில் இக்காட்டுவழியில் செல்வது மிகவும் கஷ்டமே. இது கர்னூல் ஜில்லாவிலுள்ள சிறந்த க்ஷேத்திரமாகும். பொற்றகடுகள் இக்கோயிலில் எங்கும் முன்னளில் அடிக்கப்பட்டிருந்தன. அவற்றைத் திருடர்கள் அநேகமாய்க் கவர்ந்த பின்னர் நமது அரசாங்கத்தவர் சிலவற்றைக் கைபற்றிச் சென்னைமியூஸியத்தில் வைத்திருக்கிருர்கள். அப்பொற்றகடுகளைக் காணுங்கால் இம்மல்லிகார்ச்சுனம் எத்தகைய பதியா யிருந்திருக்கவேண்டு மென்பதை அநுமானிக்கலாம்.

யும் தாண்டிச் சூரியன் நேராக வரமாட்டாமல் கோலி வருகின்ற மாளவதேசத்தைக் கண்டனர். பிறகு மாளவதேசமும் கடந்து தருமங்கள் மிகுதியாய் நிகழ்ந்திருந்த இலாட பூமியையும் தாண்டிப்போய் மத்திய தேசத்தை அடைந்தார்.

அப்பர் மத்திய மாகாணங்கள் நீங்கிக் கங்காநதியை யடைந்து வாரணாசிக்குச் சென்று விச்வநாதரைத் தரிசித்துத் தன்னுடன் கூட வந்தவர்களை அவ்விடத்தி லேயேவிட்டுக் கங்கையைத் தாண்டிக் கற்கள் நிறைந்த வழியே கயிலைக்குச் செல்வாராயினர். இவ்வற்புதத் தைச் * சேக்கிழார் திருவாக்கால் கூறலாமன்றி ஏனை யோர் சொலற்கரிதாம். செந்தாமரை போன்ற பாதங் கள் தேய்ந்தன. நடக்கச் சக்தியற்றவராய்க் கைகளை ஆதரவாகக் கொண்டு தாவிச் சென்றனர். அப்பர் கைகளும் தேய்ந்தன. தவழ்ந்து செல்ல முயன்றார். மார்பும்தேய்ந்து குருதிநிறைந்த அங்கத்தராய்த் தசை வெளியில் சிதற ஆரம்பித்தது. ஆயினும் அப்பர் வைராக்கியம் சற்றும் குறையவில்லை. இதுகண்டு சிவ பெருமான் ஒரு தவமுனி வேடம்கொண்டு அவரைப் பார்த்து “நீர் யார், இக்காட்டில் வந்த காரணம் யாது? என்று வினவினர். “நான் திருக்கைலாய தரிசனத் திற்குப் போகின்றேன்” என அப்பர் மொழிய, அம் முனி‘கைலைமலை மனிதர் செல்லக்கூடியதோ! வந்தவழி மீள்க’வென்றார். அதுகேட்ட அப்பர் இறந்துபோகும் “இந்தவுடலைக்கொண்டு கைலையில்வீற்றிருக்கும் காட் சியைப் பாராது மீளேன்” என்றார். இவர் துணிவை யறிந்த பெருமானார் விண்ணிடை மறைந்து‘திருநாவுக் கரசே எழுந்திரும்’ என்றார். அப்போது உருப்புகள் சிதைந்த அப்பரது அங்கம் முன்போல் செவ்வனே பிரகாசித்தது. நாயனார் “ஆகாயத்தில் மறைந்த ஆண் டவரே, உமது திருக்கயிலையின் கோலம்காண அருள் புரிய வேண்டு”மென்று பிரார்த்தித்தார். அதற்கு விடையாய் விண்ணின்று ஒரு திருவாக்குப் பிறந்தது. அதாவது“இதோ தோன்றும் பொய்கையில் மூழ்கும். திருவையாற்றில் நாம் கயிலையிருக்கும் முறைமை பழு தின்றிக் காண்பாய்” என்றது. அம்மொழியைச் சிர மே லேற்றுக்கொண்டு அப்பர் அப்பொய்கையில் மூழ்கி யெழுந்ததும் திருவையாற்றிலுள்ள ஒருகுளத் தினின்று வெளிவந்தவராய் உம்பர்நாயகன் திருவருட் பெருமையை உணர்ந்தார். வெளியில் வந்து இருகண் களிலும் ஆநந்தப் பெருக்குடன் மறுபடியும் அத் தடாகத்தில் மூழ்கிச் சுற்றிலும் பார்க்க யாவும் உமா மகேச்வர ரூபமாய்க் காணப்பட்டன. *

*மாக மீது வளர்ந்த கானக மாகி யெங்கு மனித்தாற்[ழச்
போக லாநெறி யன்றி யும்புரி கின்ற காதல்பொ லிந்தெ
சாக மூல பலங்கள் துய்ப்பன வுந்த விர்ந்து தனித்துநே
ரேகி னாரிர வும்பெ ரும்கயி லைக்கு லக்கிரி யெய்துவார்.

ஆய வாரிரு ளின்க ணேகுமவ் வன்பர் தம்மை யணைந்து
[முன்
தீய வாயவி லங்கு வன்தொழில் செய்ய வஞ்சினநஞ்சுகால்
வாய நாகம ணிப்ப ணங்கொள்வி ளக்கெ டுத்தன வந்துகா
ரேய வானவ ராயி னும்தனி துன்ன ரும்சுர முன்னினார்.

வெங்க திர்ப்பக லக்க டத்திடை வெய்ய வன்கதிர் கைபரந்
தெங்கு மிக்க பிளப்பில் நாகர்த மெல்லை புக்கெரி கின்றன
பொங்க ழற்பெறு பாலை வேனிழல் புக்க சூழல் புகும்பகற்
செங்க திர்க்கனல் போலு மத்திசை திண்மை மெய்த்தவர்
[நண்ணினார். (356)

இங்ங னம்மிர வும்ப கற்பொழு தும்ம ரும்சுர மெய்துவார்
பங்க யம்புரை தான்ப ரட்டன வும்ப சைத்தசை தேயவும்
மங்கை பாகர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தைமறப்ப
தங்கரங்களிரண்டு மேகொடு தாவி யேகுதல் மேவினார்[ரோ?
—பெரிய புராணம்.

*மணிநிற மொப்பன பொன்னிற மன்னின மின்னியல்வாய்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன காதல் செய்யத்
துணிவன சீலத்த ராகித் தொடர்ந்துவி டாததொண்டர்க்
கணியன சேவன தேவர்க் கையாற னடித்தலமே.
—திருவையாறு-திருவிருத்தம் - 3.

தமிழ்ப் பாடம் 67.

[நளவெண்பா]

கலி நீங்கு காண்டம்.

தன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால் வந் திருப்பதாகச் சொன்ன இருதுபன்னனுக்கு வீமன், தங்கும் மனை முதலியன அமைத்துத்தந்து போயபின், தமயந்தி பாகனைப் போந்துள வாகுகன் தான் தன்னுயிர் நாயகனே வென்று சோதித்த செய் தியை இனிவரும் சில செய்யுள்கள் செப்புகின்றன.

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நிலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. 54.

கருத்து:—குதிரைகளைத் தேரினின்று அவிழ்த்து இளைப்பாற்றியபின் நளன் மடைத்தொழிலும் செய்ய வேண்டியவ னுகையால் சமையலறைக்குட் சென் றான்,

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. 55.

பதப்பிரிவு:—ஆதி மறை நூல் அனைத்தும் தெரிந்து உணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம்போல் யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்று பொன் தேர் வரம் பாகன் புக்க மனை

அன்வயம்:—பொன்தேர் வரப்பாகன் புக்கமனை, ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துஉணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம்போல், யாதும் நிரப்பாமல் எல் லாம் நிரம்பிற்று.

பதவுரை

பொன் - பொன்னாலாகிய
தேர் - தேரைச் செலுத்துகின்ற
வரம் - சிறந்த
பாகன் - சாரதியாகிய நளன்
புக்க - சேர்ந்த
மனை - சமையல் அறையானது,
ஆதி - யாவற்றிற்கும் முதலாகிய
மறைநூல் - வேதசாஸ்திரங்கள் எல்லாம்
தெரிந்து - கற்று
உணர்ந்த - (அவைகளின் உண்மைப்பொருளையும்) உணர்ந்த

நீதி - நீதியாகிய
நெறியாளர் - மார்க்கத்தை யுடையவர்களது
நெஞ்சம்போல் - மனத்தைப்போல்
யாதும் - (சமையலுக்கு வேண்டியவை) ஒன்றும்
நிரப்பாமல் - சேகரிக்காமலே
எல்லாம் - எல்லாவித உண்டிகளாலும்
நிரம்பிற்று - நிரம்பியதாயிற்று.

விரிவுரை:—நளன் அக்கினிபகவான் கொடுத்த வரத்தினால் சமைப்பவன் ஆதலால் சமையல் கருவி கள்ஒன்றும் அவனுக்கு வேண்டியதில்லை. வரப்பாகன் என்பதற்குச் சிறந்த பாகன்,என்று பொருள்சொல்வ துடன், வரத்தினால் சமைக்கின்றவன் என்றும் சொல்லலாம். இவன், சமையலுக்குரிய கருவிகளும் பண்டங்களும் தேடாமல், சமைப்பதாகிய முயற்சியும் செய்யாமல் இருக்க, அம்மடைப்பள்ளி எல்லாம்நிறை யப்பெற்றதற்கு உபமானமாய்ப் புகழேந்தி“ஆதிமறை நூல் அனைத்துந் தெரிந்து உணர்ந்த நீதிநெறியாளர்” நெஞ்சத்தை எடுத்திங்குக் காட்டுகின்றார். வேதங் களை உருச்செய்து வாயால்மாத்திரம் சொல்லித்திரி வதால் பயனில்லை என்பதைத் தெரிவிக்கும்பொருட் டுத் “தெரிந்து உணர்ந்த” நீதி நெறியாளர், என்று கூறப்பட் டிருக்கின்றது.

மறைநூல் அனைத்தும் தெரிந்து, இப்பிரபஞ்ச மெல்லாம் பிரம்மமய மானது என்பதை உணர்ந்தவர் நெஞ்சத்தில் தனக்கென்று ஒன்று இல்லையென்னும் குறை எந்நாளும் நேராது. தன்னுடைய தனி உடை மையாய் இது இருக்கவேண்டும், அதுவும் இருக்க வேண்டும்,என்றென்று அவாவித் தேடித்திரிகின்றவன் எவ்வளவுதான் பெற்றாலும் அவன் மனம் பின்னும் குறையுடன் கூடியே இருக்கும். வேதநூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் தான் என்றும் தனதென்றும் உலகத்தினின்றும் பிரித்துக்கொள்ள மாட்டார்களாத லால் பிரபஞ்சமடங்கலும் அவர் உள்ளத்தே அடங்கி யிருக்கக் குறைவற்ற மனத்தை உடையவர்களாவார். இந்தவிஷயம்எல்லாரும் எங்கும்அறிந்ததொன்றன்று. சிற்சிலரே அறிவார். இருப்பினும் புகழேந்தி, ‘நளன் புகுந்த அறை முற்றிலும் நிறைந்துவிட்டது’ என்று சொன்னமாத்திரத்தில் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதற்கு அதை உவமையாய் அமைத்தார். இப் பாசுரத்தில் தெரிந்துகொள்ள வேண்டியதில் முக்கிய மானது, வரப்பாகன் புக்கமனை எல்லாம்நிரம்பிற்று, என்பது அன்று; மறையுணர்ந்த நெறியாளர் நெஞ் சம் நிறைந்திருக்கும் என்னும் வாய்மை. இப்படித் தெரியாத வொன்றைத் தெரிந்ததற்கு உவமைகொள் கின்ற வழக்கம் கம்பருக்கு அதிகம் உண்டு.

இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான்—
[மடைத்தொழில்கள்
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்
னைகின்ற நெஞ்சா ணயந்து. [றாள் 56.

கருத்து:—தன்னைக் கானகத்தில் நள்ளிரவில் கை விட்டுச்சென்ற நாயகன்தான் இப்பாகன் என்று சந் தேகித்த தமயந்தி தன்தோழி ஒருத்தியை அழைத்து “நீபோய் அவன் சமையல் செய்கின்ற விதத்தையெல் லாம் தெரிந்து வா” என்று அனுப்பினாள்.

கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனு டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து. 57.

கருத்து:—“என் மகனையும் மகளையும் அழைத்துக் கொண்டுபோய் அந்தப் பாகன் அருகில் விளையாட விட்டு அதன்மேல் அவன் என்ன செய்கின்றான் என் பதைத் தெரிந்துகொண்டு வா” என்று தமயந்தி இன் னொருத்தியையும் அனுப்பினாள்.

இலக்கணம்.

ஒலியினால் எழுத்துக்களும், எழுத்துக்களால் சொற்களும், சொற்களால் வாக்கியமும் ஆகின்றன. இவ்வாறு ஆகின்ற வாக்கியங்களில் சொற்கள்ஒன்றை ஒன்று தொடர்ந்து நடக்கின்ற விதங்களைப்பற்றிச் சொல்கின்ற இலக்கணத்தைத் தொடர் இலக்கணம் என்பர்.

வாக்கியத்தில் வார்த்தைகள் ஒன்றோடொன்று தொடர்கின்றபோது அவைகளினுடைய அர்த்தத் தைக் கவனித்தால், ஒவ்வொரு வார்த்தைக்கும் அவ் வார்த்தையை அடுத்துவருகின்ற மறுவார்த்தைக்கும் எந்த விதத்தில் சம்பந்தம் ஏற்படுகின்றதென்பது தெரியவரும். “மரத்தால் செய்த பெட்டியைவாங்கி னேன்.”என்பதுஒருவாக்கியம். இப்படிச்சொல்லாமல் “மரப்பெட்டி வாங்கினேன்” என்றாலும் சிறிதுகூடப் பொருள் வேறுபடவில்லை. முன் வாக்கியத்தில் ‘மரத் தால்’ என்ற பதத்திற்கும் அதற்கு அடுத்த ‘செய்த’ என்ற பதத்திற்கும் இடையே ஒன்றும் மறைந்திரா மலே அவ்விரண்டு சொற்களுக்கும் பொருள் சம்பந் தம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறே ‘செய்த’ என் னும் சொல்லிற்கும் அதற்கடுத்து வருகின்ற “பெட் டியை” என்னும் சொல்லிற்கும்இடையேயும் ஒன்றும் மறைந்திருக்கவில்லை. அப்படியே ‘பெட்டியை’ என் னும் சொல்லிற்கும் வாங்கினேன் என்னும் சொல் லிற்கும் இடையிலும் யாதொன்றும் மறைந்திருக்க வில்லை.

மற்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். ‘மரம்’ என்பது முதல் பதம். அதற்கடுத்த பதம் ‘பெட்டி’. மரம் பெட்டி, என்ற இந்த இரண்டு சொற்களும் தொடர்ந்து நிற்கின்ற. இவ்விடத்தில் அவைகளுக்கு இடையே ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உரு பும், செய்த என்ற பயனும் மறைந்திருக்கின்றன. அவ்விதமே ‘பெட்டி வாங்கினேன்,’ என்னும்போது ‘பெட்டியை’ என்பதற்குப் பதிலாய்த்தான் ‘பெட்டி’ என்றுமட்டும் சொல்கின்றோமாதலால் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபுமட்டும் அவ்விரண்டு பதங்களுக்கு மிடையே மறைந்திருக்கின்றது.

இலக்கண நூல்களில் தொடரிலக்கணம் உரைக் கும்போது வாக்கியத்தின்கண் இருக்கின்ற சொற்க ளில் முன் நிற்பதை நிலைமொழி என்றும், அதை அடுத் துப் பின் வருவதை வருமொழி என்றும் அழைப்பர். மறைதல் என்பதற்குப் பதிலாய் அதே அர்த்தமுடைய தொகுத்தல் என்னும் பதம் உபயோகிக்கப்படும். வாக் கியத்தில் ஒவ்வொரு வார்த்தையும் அதற்கடுத்த வார்த்தையோடு சேர்ந்து ஒரு தொடராகும். இப்படி அடுத்து வருகின்ற நிலைமொழி வருமொழி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கிடையே ஏதேனும் மறைந் திருக்குமானால் அந்த இரண்டு வார்த்தைகள் சேர்ந்து ஆன தொடரை தொகைநிலைத்தொடர் என்றும், ஒன் றும் மறையாதிருக்குமாயின் தொகாநிலைத்தொடர் என்

றும் கூறுவார். வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், அதற்குமுன் இருக்கும் வார்த்தையைக் கருதும்போது வருமொழியாயும், அதற்குப்பின் வருகிற வார்த்தையைக் கருதும்போது அதுவே நிலைமொழியாயும் அமையும்.

"குதிரையைப் பிடித்து மரத்தில் கட்டினன்," என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இதனில் மூன்று தொடர்கள் இருக்கின்றன:—

முதலாவது, 'குதிரையை' என்னும் நிலைமொழியும் 'பிடித்து' என்னும் வருமொழியுஞ் சேர்ந்து ஒரு தொடர். இவைகளுக்கு இடையே ஒன்றும் தொக்கு இல்லையாகையால் இது தொகாநிலைத்தொடர்.

இரண்டாவது, முன் வருமொழியாயிருந்த 'பிடித்து' என்னும் பதம், இப்பொழுது நிலைமொழியாகி, 'மரத்தில்' என்ற வருமொழியோடு சேர்ந்து, ஒரு தொடராகின்றது. இந்தத்தொடரும் தொகாநிலைத்தொடர்.

மூன்றுவது, முன் வருமொழியாயிருந்த 'மரத்தில்' என்னும் சொல் நிலைமொழியாகிக் "கட்டினன்" என்னும் வருமொழியோடு மற்றொரு தொடராகின்றது. இதுவும் தொகாநிலைத்தொடர்..

இன்னொரு வாக்கியம் எடுத்துக் கொள்வோம் :—

ஆமை முதுகில் அலவன் துயிலும் வளநாடு கைவிட்ட மன்னன் வந்து சேர்ந்தான்.

இந்த வாக்கியத்தில் ஒன்பது தொடர்கள் இருக்கின்றன:—

(1) ஆமை முதுகில்—இது விரிந்திருந்தால் ஆமையினுடைய முதுகில், என்றிருக்கும். ஆமை, நிலைமொழி; முதுகில், வருமொழி. இவ்விரண்டிற்கும் நடுவில் 'உடைய' என்னும் ஆறும்வேற்றுமை உருபு தொக்குஇருக்கின்றது. ஆகையால், தொகைநிலைத்தொடர்

(2) முதுகில் அலவன்—இதனில், 'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபு விரிந்திருக்கிறது. ஆகையால், தொகாநிலைத்தொடர்.

(3) அலவன் துயிலும்—நிலைமொழி வருமொழிகளுக்கு இடையே ஒன்றும் மறைந்திருக்கவில்லை. ஆகையால் தொகாநிலைத்தொடர்.

(4) துயிலும் வள(மை)—தொகா நிலைத்தொடர்.

5) வள(மை) நாடு—வளமை ஆகிய நாடு, என்றிருக்கவேண்டிய இத்தொடரில் 'ஆகிய' என்பது மறைந்திருப்பதால் தொகைநிலைத்தொடர்.

(6 நாடு கைவிட்ட—நாட்டைக் கைவிட்ட, என்று விரியும். இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' தொக்கு இருக்கின்றது. ஆகையால் தொகைநிலைத் தொடர்.

(7) கைவிட்ட மன்னன்—ஒன்றும் மறைந்திருக்கவில்லை; தொகாநிலைத்தொடர்.

(8) மன்னன் வந்து—தொகாநிலைத்தொடர்.

(9) வந்து சேர்ந்தான்—தொகாநிலைத்தொடர்.

தொகா நிலைத்தொடர்களில் ஒன்பது விதங்கள் இருக்கின்றன:—(1) வினைமுற்றுத்தொடர் (2) பெயரெச்சத்தொடர். (3) வினையெச்சத்தொடர். (4) எழுவாய்த்தொடர். (5) விளித்தொடர். (6) வேற்றுமைத்தொடர். (7) இடைத்தொடர். (8) உரித்தொடர் (9) அடுக்குத்தொடர்.

மேற்சொன்ன ஒன்பதுவகைத் தொகாநிலைத் தொடர்களையும் இன்ன இன்னது இன்னதொடர் என்று தெரிந்துகொள்வது வெகு சுலபம். இந்தத் தொடர்களுக்கு அவ்வப்பெயர் அதனதன் நிலைமொழியைக் கருதி வைக்கப்பட்டிருக்கின்றது! நிலைமொழி வினைமுற்றுயிருந்தால் அந்தத் தொடர் வினைமுற்றுத் தொடர். 'வந்தான் இராமன்' என்ற சொற்றொடரில் நிலைமொழியாகிய 'வந்தான்' என்பது வினைமுற்றுதலால்? இந்தத் தொடரை வினைமுற்றுத்தொடர் என்றழைப்பார். இதனையே "இராமன் வந்தான்" என்று மாற்றிச் சொன்னுல், "இராமன்" என்ற நிலைமொழி எழுவாய் அல்லது முதல்வேற்றுமையா யிருப்பதால் அது எழுவாய்த்தொடர் ஆகிவிடுகின்றது.

மாறன் பாப் பாவினம்.

[276-வது பக்கத் தொடர்ச்சி]

வெண்பாப் பாவினம்

வேண் சேந்துறை.

பெருநூல் பிறபல கற்பதின் மாறன்
ஒருநூல் கற்ப தாதிய முயிர்க்கே.

இது, குறள்வெண்பாவிற் கினமாகிய வெண் செந்துறை. இது விழுமிய பொருளு மொழிகிய வோசையுமாக வரல் வேண்டுமென்ற முறையே வந்தவாறு கண்டுகொள்க. இது, திணை-காஞ்சி. துறை-முதுமொழிக்காஞ்சி. அலங்காரம்-சுவையினுள் கல்வி பற்றிய பெருமிதம். 1

குறட் டாழிசை.

அண்டர் நாயக னரங்கன தடித்தளி ரணிமுடி
[மிசைபுனை தூயோர்
மண்டு தெண்டிரைக் கடற்புவி யிடைப்பிற வாரே.

திணை-பாடாண். துறை-பழிச்சினர் பணிதல். அலங்காரம்-ஏகாங்கரூபகம். இஃதீற்றடி குறைந்து விரண்டடியாய்ப் பல சீரான் வந்தமையான் குறட்டாழிசை. 2

குறட் டாழிசை.

நிலையி லாதன மூன்றமே நிலையெனு நினைவொடு
நெடியமா லடியிணை நினையாதார்
தொலைவி லாப்பவக் கடலிடை யழுந்துபு
துயர்தலைப் படுவாரே.

இதுவு மீற்றடி குறைந்து, இரண்டடியாய் ஒருவிகாரப் பத்தான் வந்தமையாற் குறட்டாழிசை. இது, திணை-பொதுவியல். துறை-பெருங்காஞ்சி. அலங்காரம்-ஏகதேசரூபகம். 3

சேந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள்.

அம்புய மாதன் புறமால் மலர்ப்பதந்
தம்பமென் றுய்ந்திலார் தாம மெய்தார்.

இது, விழுமிய பொருளு மொழிகிய வோசையுமின்றியிரண்டடியுந் தம்முள் ளளவொத்து வந்தமையாற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள். அலங்காரம் -தொகையுவமை. திணை-பொதுவியல். துறை-முதுமொழிக்காஞ்சி. 4

குறட் டாழிசை.

புரவலர்சீத் தார்தமக்குப் பூமகள்கோன் றிரு
[நறைபூ
ரிரவலரிக் காமம் யமன்.

இது, செப்பலோசையிற் சிதைந்து, வேற்றுத்தளைதட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்துவந்ததாழிசைக்குறள். அலங்காரம் - முன்னவிலக்கினுள் பொருள்விலக்கு. திணை-

பெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை - பொழுது கண்டிரங்கல். 5

வெளி விருத்தம்.

மூவா மறைக்கு முதன்மொழியாய் நின்றுதவு
முகுந்தனுமம்
ஓவா நமன்வந் துடக்கா தொழிப்பதுவு
முகுந்தனுமம்
தாவாத பேரின்பந் தனைவிழைவார் சாற்றுவது
முகுந்தனுமம்.

இது மூன்றடியாய் "முகுந்தனுமம்" என்று தனிச்சொற் பெற்றுவந்த வெளிவிருத்தம். இது, திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - சுவையினுள் கல்விபற்றிய பெருமிதம். 6

வெளி விருத்தம்.

நாரா யணனே நரர்பேர் புகழா-தருள்கூர்வாய்
பேரா யிரவா பிறர்தே நயவா-தருள்கூர்வாய்
கூரா ழியனே நமனுர் குறுகா-தருள்கூர்வாய்
ஆரா வமுதன் றளித்தாய் பிறவா-தருள்கூர்வாய்.

இது, நான்கடியாய் "அருள்கூர்வாய்" என்னுந் தனிச்சொற் பெற்றுவந்த வெளிவிருத்தம். இதுவுந்-திணையுந் துறையு மது. அலங்காரம்-சுவையினுள் அசைவுபற்றி வந்த வழுகை. 7

வேண் டாழிசை.

உண்டிக் காய்மா னிடர்பே ருரையா
ரண்டத் தப்பா லந்தா மத்தான்
றொண்டர்க் காட்செய் பவர்.

இது, மூன்றடி யாசிரியத் தளையான் வந்த வெண்டாழிசை. 8

ஓரோலி வெண்டுறை.

படர்சிறைவண் டினந்துதைந்தே ழிசைபரப்பு
நறைவகுளப் பைந்தா மத்தான்
துடரிவரைக் கொம்பரிற்செந் தேனெனவே
யினிமைபெறுஞ் சொல்லீர் சொல்லீர் [தாய
வடவரைபோற் பணைமுலைக்கீழ் மதித்திடுதற் குள
[கேதென்றே
விடர்பெறுநுண் ணிடையிணைக்கட் புலங்கொளவிங்

இது, நான்கடியாய் ஈற்றடி யிரண்டு மிரண்டுசீர் குறைந்து வந்த வோரொலி வெண்டுறை. பகுதி-மதியுடன்படுதல். துறை-இடைவினுதல். அலங்காரம்-அவயவவுவமை 9

ஓரோலி வெண்டுறை.

ஏனைக் கடவுளர்பா லெவ்வரமும் பெற்றிடுக்க
[ணிழைத்த தாலே
கானத் தடைந்தரக்கர் கட்டழித்தான் றுள்பரவார்
மானத்தின் மாண்பிறந்த மானமும் வேறில்லையே.

இது, மூன்றடியா யீற்றடியிரண்டு மிரண்டுசீர் குறைந்து வந்த வோரொலி வெண்டுறை. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து. அலங்காரம் - சுவையினுள் பேதைமை பற்றிய நகை. 10

வேற்றொலி வேண்டுறை.

தளையவிழ்தண் ணறவருந்திச் சுரும்பிமிர்பூந்
[தண்டுளபத் தாரா னறன்
விளைவளர்வண் புகழ்த்திருமால் பனிவரைமேன்
[மூன்றுமத விழுது கூர்கைம்
மலையுளதோ வந்ததென்ப ரஃதன்றி வாளியோடுங்
கலையுளதோ வந்ததென்பர் கறையொடுங்
[கண்ணின்றிக்
கொலையுளவாம் படிவேட்டை குறிக்கொள்வா
[ரிடந்தழியச்
சிலையுளதோ வெனிலுடக்குந் திண்சிலையுஞ்
[சினைதருபச்
சிலையுளரா லொளியிலரா லிவரெண்ணந்
[தெளிவரிதே.

இது, எழடியாய் முதலிரண்டடியு மறுசீரா யோரோசையாய்ப் பின்னைந்தடியும் வேறோ ரோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. ஐந்தடியானு மாறடியானும் வருவன "யாப்பருங்கல விருத்தியுட்" கண்டுகொள்க. பகுதி - இருவரு முளவழி யவன்வர வுணர்தல். துறை - ஐயுறுதல். அலங்காரம் - அற்புதம். 11

ஓரோலி வேண்டுறை.

மதுமகி ழணிதிரு மார்பன் கூறிய
முதுமொழி யுரைதமிழ் மறைமுழு துற்றோ
ரிதுபொரு ளெனுமுரா ணெய்துவ ரெய்தா
ரெதுபொரு ளெதுபொரு ளெனுநொது மலர்நூ
லதுபுக லுரைகற் றூர்.

இஃது, ஐந்தடித்தாய் ஈற்றடியொன் றொருசீர் குறைந்து வெண்பாவி னீற்றடிபோல் மூச்சீர்த்தா யாசிரியத் தளையான், நாளென்னு மோரசைச் சீரா னிற்ற வோரொலி வெண்டுறை. திணை-பொதுவியல். துறை-பனுவல்வாழ்த்து. அலங்காரம்-சுவையினுள் கல்விபற்றிய பெருமிதம். 12

வேள்ளோத் தாழிசை.

1. வான்மா சறவழுத்து வாச மகிழ்த்தாமத்
தான்மா சறவுரைத்த தண்டமிழ்ப்பா வொன்
லான்மாவி தென்றறிவா ரார். [றிலையே 13
2. வாதியர்வாய் வீ ணடங்க வாசவகு ளாம்புயத்தா
ஞேதிய நூ லொன்றிலையே லுத்தமநா ராயணனே
யாதிமுத லென்றறிவா ரார். 14
3. கொந்தா ரிலஞ்சியந்தார்க் கோமான் குருகூருள்
வந்தா தரித்துரைத்த வண்டமிழ்ப்பா வொன்
லந்தாம மென்றறிவா ரார். [றிலையே

இவை, வெண்டளைத்தாய் வந்த சிந்தியல் வெண்பா வொரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையால் வெள்ளோத் தாழிசை. 13

(வெண்பாவின முற்றிற்று.)

மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினுல் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

11. குலமுறை கிளத்து படலம்

தயரதன் வேண்டிலன் அயலவ ருதவி.

274 பக்கத் தொடர்ச்சி

ஆதித்தன் குலமுதல்வர் முன்னிருந்தோர் அளப்பரிய பெருமையினை ஒருவண்ணம் குறித்தபின்னர்க் கோசிகன், நிகழ்கின்ற தன்கதைக்கோர் இறையாய இவ்விராமன் தன் வரலாறும் புயவலியும் சனகனுக்கு விளம்பத் தொடங்கி, அன்னவனைப் பயந்தளித்த நல்லற மூர்த்தியன்ன தயரதனைப் புகழ்கின்ற பாசுரத்தில், கூளியுந்திருத்தும்படி 'ஆண்டான்' உலகை மாந்தாதா என்றயர்ந்து முன் இயம்பிவிட்ட குறைதீர, மாசிலா வரசியல் மாட்சியெல்லாம் அமைந்திருக்கக் காண்கின்றோம். "அயன்புதல்வன் தயரதனை அறியாதார் இல்லை," என்று அம்முனிவன் தன் வழக்கப்படி முன்னுரையிட்டு,

துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய் [யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப் [போன்
தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்.

[திருமாலின் பிரகாசம் பொருந்திய சக்ராயுதம் போன்ற சூரியன் தோன்றியவுடன் பனியைத் தொலைப்பதுபோல், பகையைச் செயித்து, உயிர்கள்யாவும் வருந்தாமல் தம் வாழ்நாள் கழிக்கும் வண்ணம் பூமியைக் காப்பவனும், தன்னுடைய தனுவைத்தவிர வேறொன்றையுந் தனக்குத் துணையாகக் கொள்ளாதவனும், தருமத்தையே தனக்குக் கவசமாக அணிந்தவனும் ஆகிய அத்தயரதன் மக்கட்பேறுமையால் வருந்துபவ ணுயினன்]

என்று புகலும் இச்செய்யுளில் அரசியற் படலத்தின் கண் கம்பர் தன்கூற்றாகச் செப்பியவற்றின் பெரும்பாகம் அடங்கியிருக்கின்றது. தயரதன் 'காப்போனே' யன்றி ஆள்வானல்லன். காப்பதும் கோசல தேசத்தை மாத்திரமன்று; உலகடங்கலும் அவனது காப்பிற்குப் பாத்திரமாயிருக்கின்றது. அவ்வுலகத்திலும் மாந்தரெனும் இனமேயன்றி உயிர்கள் யாவும் தயரதனால் காக்கப் பெறுகின்றன. பெருந்தகைக் குணங்கள் வாய்ந்த மேன்மக்கள் தாம் புரந்தருள்வதற்குத் தம் இல் என்றும் ஊரென்றும் இனமென்றும் நாடென்றும் எல்லையிட்டுக் குறிக்கொள்ளார். ஆதலின், "கோசலங் காப்போன்" என்னாது கோசிகன், 'படிகாப்போன்' தயரதன் என்றும், மாந்தரேயன்றி எவ்வுயிரிமே துனியின்றிச் செல்லும்படி அவன் காப்பவன் என்றும் மதித்துக் கூறினன். இக்கருத்து முன் அரசியற் படலத்தில்

நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியு மயோத்திமா நகரம் போலுமே.

[பெரிய சக்ரவாளகிரியே மதிலாகவும், அதற்குப் புறத்திருக்கின்ற நீண்டதும் அகன்றதுமாகிய கடலே அகழியாகவும், பல இரத்தினங்களமைந்த அழகிய அரண்மனைகள் அங்கங்கிருக்கின்ற மலைகளே யாகவும் அமைந்து இவ்வுலகம் முழுவதும் தயரதனுக்கு அயோத்திமா நகரம் போலவே அண்மிய தாயிற்று]

என்றும்,

வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினன்.

[வயிரமணிகளாற் செய்த சிறந்த ஆபரணங்களையணிந்த சிங்கத்தைப்போன்ற பலம்பொருந்திய தயரதன் உயிர்களை யெல்லாம் தன்னுயிரிற்கு நிகராகக் காத்தலால், குற்றமற்ற இவ்வுலகிலுள்ள சராசர உயிர்கள் யாவும் ஒருங்கே அடங்கப்பெற்றவோர் உடம்பு போல்வான் ஆயினன்]

என்றும் வந்துள பாசுரங்களில் காணக்கிடக்கின்றது.

இன்னவாறு தன் காவலிலடங்கிய உலகடங்கலுமுள்ள உயிர்களுக்குப் பகையேதேனும் நேருமாயின் அதனை வெல்லவேண்டியது வேந்தன் கடன். ஆயின் இத்தயரதன் எவ்வாற்றால் வென்றனன்? ஒற்றரால் துருவியும் மந்திரக்கிழவரோ டாய்ந்தும் தந்திரத்தலைவரைச் செலுத்தியும் தன்கைப் படைகொண் டடர்த்துமன்று. இவையாவும் அறத்தினால் வரும் ஆன்மவன்மை பெற்றிராத மன்னவர்க்குரிய அயல் உதவிகள். அமைச்சரும் ஒற்றரும் அணிகளும் ஆயுதங்களும் மறவேந்தர்க் கின்றியமையாதன. "நல்லற மூர்த்தியன்னான்" என்று கம்பர் அரசியற் படலத்தின் முதற் செய்யுளிலேயே தயரதனை அறிமுகம் செய்துவைத்ததற் கிணங்க, அப்படலத்தில் அலங்காரமாகவேனும் அவசியமாகவேனும் அயல்நின்று அவனுக்கு உதவுமென்னத்தக்க அங்கங்கள் ஒன்றுந் தந்திலர். கம்பர் உரைக்காத காரணத்தினாலேயே தயரதனுக்கு அரண்களேனும் அணிகளேனும் மந்திரிகளேனும் இருந்ததே யில்லையென்று கொள்ளப்படாது. ஐவகை அரண்களும் இருந்தன. ஆனால் அவைகளது காவலை இவன் வேண்டினானல்லன். தருமத்தின் கவசத்தனாகிய தயரதனுக்கு அவ்வரண்களெல்லாம் அழகிற்குமட்டுமே அமைந்திருந்தன. "கயரத துரகமாக் கடல்கொள் காவலன்" என்று திருமாலும், 'கயரத துரகமாக் கடலன்' என்று நீலமாலையும் குறிப்பதால் தயரதனுக்குப் பெரியதோர் தானையும் இருந்ததென்பது திண்ணம். 'எனினும், அவைகளும் அழகிற்கேனும் ஆசைக்கேனும் அமைந்திருத்தல் வேண்டுமேயன்றிப் பகைவரைப் பொருதடக்க உடன்வந் துதவுதற்கு அமைந்தன வல்ல. தயரதன் தன்னுடைய "வாளால் காய்ந்தே கடந்தான் பகைவேலை" என்று கம்பர் காட்டினார். அப்பாசுரத்தில் அங்கு (அரசியல் 5) வாளால் காய்ந்தான் என்றுரைத்ததின் உண்மைப் பொருள், இங்கு, 'வெய்யோன் பனிவென்றபடியென்ன பகைவென்றான்' என்பதால் நன்கு விளங்குகின்றது. தானையின் துணை தனக்கு மிகை எனக்கொண்டாலும் தன் கை வாளைத்தான் செலுத்திப் பகைவர் உடலங்களை உழுது உழுது நமனைக் கொணர்ந்து விதைத்து வென்றானோவெனின், அவ்வாறுமன்று. தன் வாளால் காய்ந்தே அப்பகைவர் தொகுதியைக் கடந்தனன். காய்தல் என்பதற்கு இங்குத் தகைந்து அழித்தல் என்பதன்று பொருள். சூரியன் காய்வதுபோல் இருந்த நிலையிலேயே தான்

தோன்றுவதல்லால் வேறோர் முயற்சியும் செய்யாமலே பகைவரை வறளக்காணல், என்பது பொருளாம். சூரியன் பனியை அகற்றும் வண்ணம் இவ்வண்ணம். அறத்தின் உருவம்போல்வான் ஒருவன் தோன்றிய பின்னர்ப் பகையகலப் போர்சில செய்வதும் வேண்டுமோ! "ஆவரும் வன்மைநேர் அறிந்து தீட்டலால் மேவரும் கையடை வேலுந் தேயுமால்" என்று அவ்வரசியல் படலத்தில் விளையாட்டாகக் கூறியிருப்பதும், தயரதன் அடர்ந்துவரும் படையெதிர்த்துப் போர் புரிந்திலன் என்பதைக் காட்டுகின்றது.

சுமந்திரன் முதலாக மந்திரிமார்கள் எண்ணிறந்தோர் தயரதனுக்கு இருந்தனர் என்பதற்கும் ஐயமில்லை. எனினும், பார்காக்கும் பெருந்தொழிலில் இம்மன்னவன் அன்னார் உதவியை வேண்டினதுமில்லை. அயோத்தியாகாண்டம் முதற்படலத்தில்தான் அவன் அமைச்சருடன் மந்திரஞ்சூழ்வதைக் காண்கின்றோம். ஆனால், எற்றக்கு! மன்னுயிர்க்கு உறுவது செய்வகை யாதென நாடுதற்கு அன்று 'தன்னுயிர்க்கு உறுவது செய்யுங் காலையிற்றான் அவன் அயலுதவி நாடநேர்ந்தது. ஏனெனில், தமக்கெனவாழாமல் பிறர்க்குநன்மை செய்வதே நோக்கமாயுடையவர்க்கு அவர் நினைத்த தூயகருமம் நிறைவேறத் துணைவரும் வேண்டா, கருவியும் வேண்டா, எவ்வகை உதவியும் வேண்டா. உள்ளத்திலூன்றிய அவ்விருப்பத்தின் வன்மை ஒன்றுமே போதும். அஃதவர்க்கு அளவிறந்ததோர் ஆன்ம சக்தியை அளிக்கும். அதுகொண்டு செயற்கரிய பெருங் கருமங்கள் செய்யலாம். இதைவிட்டுப் பரோபகாரச் செயல்களில் மற்றவரைத் துணைகொள்ள எண்ணுவதே, தன்னுடைய சக்தியில் நம்பிக்கை குறைந்த தன்மையைக் காட்டும். அதுவன்றித் தானாகச் செய்யுந்திறம் நாலுபேரைத் தனக்கு இணையாகத் துணைகொண்டு செய்ய இயலாது. நால்வரைச் சேர்த்துக்கொண்டு ஒரு நற்கருமம் செய்வதென்றால், இடையிடையே நிகழும் அபிப்பிராய பேதத்தாலும் செய்த புகழ் தனக்கே சேரவேண்டு மென்றவோர் எளியபுத்தியாலும், இவைபோன்ற பலகாரணங்களாலும், எண்ணிய தொன்றும் நிறைவேறுமற் போவதை நாடோறுங் காண்கின்றோமே. மேனாட்டு மேதாவிகளுள் ஒருவராய எமர்ஸன் என்பார், 'உண்மையான உதவி உலகத்திற்குப் புரியவேண்டுமென்று நினைப்பவன் தன்னோடு ஆட்கள் சேர்த்துக்கொள்ளக்கொள்ளப் பல வீனனாகின்றான், (He is weaker by every recruit to his banner) என்று கம்பரைப்போலவே தத்துவ அறிவுகொண்டு ஓதியுள்ளார். தமக்கென்று ஓர் ஊதியம் தனியாக வேண்டும்போதே யாவரும் பிறருடைய துணைநாடி அவாவுவார். சங்கங்கள் சேர்ந்து, காரிய நிர்வாகக் 'கமிட்டிகள்' அமைத்துப் 'பிரசாரங்கள்' செய்து ஆள்சேர்க்கின்ற கருமங்களெல்லாம் அந்தரம் நோக்கில் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவருடைய தனித்தனி நன்மையைத் தேடுகின்ற நோக்கத்தை யுடையன. ஆதலின் துணைவேண்டியிருக்கின்றது. நான்கு எருதுகள் ஒற்றுமையாயிருக்கின்ற வரையில் ஒவ்வொன்றும் சிங்கத்தால் கொல்லப்படாதிருந்ததைக் காட்டுகின்ற 'ஈஸாப்' பின் கட்டுக்கதை விளக்குவது இதனையே யாம்.

ஆதலின் தயரதன், உலகினில் சென்று நின்று வாழ் உயிரனைத்தும் ஓம்பிய நாளெல்லாம் அமைச்சர் தம் மந்திரம் வேண்டாது "தன்னுயிர்க்கு உறுவது செய்ய வெண்ணிய" போதுதான் அவர்கள் உதவியை வேண்டுவானாயினன் என்பது மறத்தற்பாலதன்று. அதுவுமன்றித் தயரதன் அந்நாள் முதுமையால் மிகத் தளர்ந்து முன்னையின் மனத்திட்பம் மிகக் குறைந்துமிருந்தனன். இதனாலும் இதுகாறும் கூட்டொருவரையும் வேண்டா அக்கொற்றவன் அமைச்சரோடு தன் செயலை ஆயப் புக்கவன் ஆயினன். தளர்ந்த நிலையில் தயரதன் மனம் அத்தருணம் இருந்ததென்பதற்கு, அவன் "வையம் யான் ஆண்ட ஆண்டு" என்று ஆட்சியை நினைத்துத் தன்னுரையை ஆரம்பித்ததும்,

இறந்திலன் செருக்களத் திராமன் தாதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னரும்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ

என்று தகவற்ற மொழி சில இடையே கழறியதுமே தக்க சான்றாகும். தன்னுயிர்க்கு உறுதியென்னாது மன்னுயிர்களது நன்மையை முன்னிட்டே இராமனுக்குப் பட்டஞ்சூட்டக் கருதியிருப்பானாயின் தயரதன் தன் மந்திரிகளை, "யாது நும் கருத்து" எனக் கேளாமலே அதனை முடித்திருப்பான் என்று எண்ண நேரிடுகின்றது. மன்னுயிர்க்கு உறுதிநாடும் நாளெல்லாம் இன்புற்றிருந்த தயரதன், மந்திரிகளோடு ஆய்ந்து தன்னுயிர்க்கு உறுதிதேடிய கருமத்தால் கொடியதோர் துன்பமுற்று இறுதியே கண்டான் என்பதையும் அறிவோம். தனக்கென்றேனும், அல்லது உளப்பாட்டுத் தன்மையில் தமக்கென்றேனும் நலம்நலம் எனச் சில சொல்லித் தேடியவர் யாரே சுகப்பட்டார்!

விச்வாமித்திரன் ஜனகனுக்குச் சொல்லிய நாளில் தயரதன், தன்னுயிர்க்கு உறுவது செய்யத் தலைப்பட்டிலன்; மூப்பினது தளர்வும் அவனை இன்னும் பற்றியதில்லை. ஆதலின், "தனுவன்றித் துணையில்லான்" என்று சாற்றினன். வடமொழியில் తను என்றும் ధను வென்றும் வேறுவேறு உச்சரிப்புடைய இரண்டு பதங்கள் இருக்கின்றன. முன்னதற்குச் 'சரீரம்' என்றும் பின்னதற்கு 'வில்' என்றும் பொருள். மற்றுத் தமிழில் 'தனு' வென்று வருகையில், அது சரீரத்தையுங் குறிக்கலாம், வில்லையும் குறிக்கலாம். இவையிரண்டில் கம்பர் அச்சொல்லை எப்பொருளில் இங்குப் பயின்றுளார் என்று ஆயுங்காலையில், முன்னுரைத்த தத்துவங்களுக்கிணங்கத் தயரதன் "தன்னுடைய உடலன்றி வேறோர் துணை வேண்டாதவன்" என்று கொள்வதே சிறப்புடைத்து எனத் தோன்றுகின்றது. உடல், சரீரம் என்பன இங்கு அவனுடைய ஊனையும் தோலையும் குறிப்பனவல்ல. ஆன்மவொளி திகழ்கின்ற அந் நல்லற மூர்த்தியன்னவனது ஆகாரம் (Personality) எந்நன்மையையும் தன்னுடையதோற்றத்தால் மட்டுமே பயக்கவல்லதென்பது சான்றோர் உணர்ந்தறியாப் புதுமையன்று.

இத்தகைய தயரதனை ஈற்றடியில் "மனு வென்ற நீதியான்" என்பதும், அவன் நீதி முறையில் மநுவின் மிக்கவனோ மற்று இணைதான் ஆனவனோ என்னும் ஐயத்திற் கிடமாயிருக்கின்றது. தேர்க்காலில் மனு வேந்தன் தன்மகனைக் கிடத்தினானென்றால், இவனும் வன்தாளின் இணைவணங்கி வளநகரம் தொழுதேத்த நின்று அரியணைமேல் இருந்த தன் செல்வப்புதல்வனை "நெடுங் கானம் படரப் போகு" என்று நீதி வழங்குவானாதலால் விச்வாமித்திரன், வருவது நோக்கி 'மனு என்ற நீதியான்' எனச் செப்பியிருத்தலும் ஏற்புடைத்து.

189050

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

1. ஐயமும், அமைதியும்.

"ஆன்றும் இன்றும்" என்ற தலைப்பின்கீழ்ச் "சிலப்பதிகாரமும்,மணிமேகலையும்-ஐயம் விளைத்துள்ள ஐயம்" என்று யானெழுதியவற்றிற்கு, ஸ்ரீமான் இராமாநுஜன் அமைதி கூறியிருப்பதைக் காணப் பெரிதும் மகிழ்கின்றேன். கூற முயல்வது அமைதியாயினும், சிற்சில இடங்களில், சினங்கலந்த பரிகச மொழிகள் சில, ஸ்ரீ இராமாநுஜன் தெறிக்கின்றார். எனது "ஐயம் விளைத்துள்ள ஐயம்" என்னும் உரைக்கும், தாழியுள்ளிருந்து சீறும் கரும்பாம்பொன்றுக்கும் உவமை புனைகின்றார். "இனி ஒன்று: 'புகார், கூடல், வஞ்சி இவற்றையும், இவற்றுள் நிகழ்ந்த வரலாற்றையுமா கூறுகின்றன அவை?' என அவர் வினவாரென்னுந் துணிபு எற்குப் பெரிதுமுண்டு" (கலா நிலயம் வால் 2: பக்: 212.) என்று எள்ளிக் குறுநகை புரிகின்றார். இத்துணிபுக்கும், முன்னே குறித்த கரும்பாம் புவமைக்கும் யான் ஸ்ரீ இராமாநுஜனுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டவன். ஆதலின், "ஐயம் விளைத்துள்ள ஐயம்" என்ற 'கரும்பாம்மை"க் 'கலாநிலயத்' தாழியுள்ளே வைத்து ஸ்ரீ இராமாநுஜனைத் "துணுக்குற"ச் செய்தேனே யென வருந்துகிறேன்.

2. முரணும் இடைவரியும்.

இடையிலுள்ள ஒரு வரியை யான் மறந்ததாலோ, அன்றி, மறைத்ததாலோ அவர்தம் மொழிகளைத் தம்முளே முரண்பட்டு நிற்பனவாகக் காட்ட என்னால் இயன்றது என்பர் ஸ்ரீ இராமானுஜன். யான் மறக்கவுமில்லை, மறைக்கவுமில்லை. "இம்முறையே நின்றொளிர்வன சங்க நூற்களும், அவற்றொடு தொடர்புடையவும்" என்ற இடை வரியினால் எனது நிகமனம் (Logical Conclusion) எவ்வாறு தகர்க்கப்படுகின்றது? ஒருமையைப் பன்மையாக்கவேண்டும் அவசியத்தைத்தவிர, அவ்விடைவரியால் விளையப்போவது வேறொன்றும் இல்லையே! "அந்நாள் இருந்தவெலாம் உண்மையில் எந்த நிலைமையில் இருந்தனவென்று நாம் வேறு வழிகளால் அறிந்திருந்தாலன்றோ, சிலப்பதிகாரம் உரைப்பது உண்மைக்கு மிகையுமில்லை, குறையுமில்லை என்று உணர்ந்தவராவோம்" [ஐயம் விளைத்துள்ள ஐயம்" (கலாநில: வால் 2: பக்: 173)] என்னும் எனது சொற்றொடரில், யான் மறந்ததாகவோ, அன்றி,மறைத்ததாகவோ கருதப்படும் இடைவரியை, யான் குறித்ததாகக் காட்டவேண்டின்,"சிலப்பதிகாரம் உரைப்பது" என்பதற்குப் பதிலாக "சிலப்பதிகாரமும், சங்கநூற்களும் அவற்றொடு தொடர்புடையவும் உரைப்பன" என்ற சொற்களை அமைக்க வேண்டி வரும்.

3. மாறு கூற இடனேது?

"சிலப்பதிகாரம் ஒன்றைமட்டும் யான் குறித்திருப்பின் 'அது மிகையுங் குறையுமின்றிக் கூறுவதென எங்ஙனங் கண்டீர்?' என வினவ இடமுண்டு. பிற சங்க நூற்களையும் குறித்திருக்கும்பொழுது மாறு கூற இடனேது (கலாநிலயம்: வால் 2: பக்: 214) என்பது ஸ்ரீ இராமானுஜன்தன் வினா. "சிலப்பதிகாரம், அதன் காலத்தைப்பற்றி உரைப்பதைச் சங்க நூற்கள் தம்முளே கொண்டுள்ளன; ஆதலின், முன்னதன், மிகை குறை யில்லா வாய்மைத்திறத்திற்குப் பின்னவை போதிய சான்றுகளாம்" என்பது அவர்தம் நினைவாயின், சங்க நூற்கள் உரைப்பன யாவும் கேவலம் உண்மையே யென்பதை, வேறுவழிகளால் அறிந்திருந்தாலன்றோ, அவைதமின் சாட்சியங் கொண்டு சிலப்பதிகாரம் மொழிவது எத்துணைத் தூரம் வாய்மை வயத்தது என்பதை ஆராய வல்லவராவோம்" என்பதனை அவர்தம் சிந்தனைக்கு அளிக்கிறேன். பத்துப் பதினைந்து இலக்கிய நூல்கள் ஒரு விஷயத்தையே பற்றிப் பேசினால், அவ்விஷயம் உண்மையில் நடந்ததொன்றே யெனக் கொள்ளலாகாதோ என்னுங் கேள்வி இதனின்றும் பிறக்கலாம். ஆம், பொதுவாகக் கொள்ளலாம். ஆனால், அப்பத்துப் பதினைந்து இலக்கிய நூல்களும் அவ்விஷயத்தைப்பற்றி ஒரே தன்மைத்தாகப் பேசியிருந்தால் மட்டுமே, நூல்கள் அவையெலாம் உரைப்பன உண்மைக்கு மிகையுமில்லை, குறையுமில்லை என்னலாம். அதுவும் அவ்விஷயத்தைப்பற்றிய வரையிலேயே. எனவே, சங்க நூல்களைச் சான்றுகளாகக்கொண்டு சிலப்பதிகாரம் அதன் காலத்தைத்திற்குரியதென்றுஎவ்வெவ்விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசுகின்றதோ, அவைகளைப் பற்றி யெல்லாம் சங்கநூற்களிற் பல, மாறுதலின்றிப் பேசுகின்றன என்று தெளிதல்வேண்டும்.மற்று, இலக்கிய நூல்களைக்கொண்டு அவைதமின் காலவாராய்ச்சி செய்வதும், அக்காலங்களில் இருந்தனவற்றையும், நிகழ்ந்தனவற்றையும், அந்நூல்கள் உரைப்பதைத் தொகுத்து அறிய முயல்வதும், ஒருவகையில் சுவைபயப்பனவெனினும் அவ்வாறு செய்வதால் அடைகின்ற பயன் செய்வோரைக் குறித்திருக்கிறது. இலக்கியநூல்களில் அவைதமின் காலத்தைப்பற்றிய குறிப்புகளும்,வரலாறுகளும் இருக்கக்காணின்தேசசரித்திர ஆராய்ச்சிவாணனானவன் இக்குறிப்புக்களையும், வரலாறுகளையும் தொடர்ந்துசென்று அக்காலத்துச் சிலா சாஸனங்கள், நாணயங்கள், நியாயத்தலம் அரசாங்க நிர்வாகம் இவை சம்பந்தமான பட்டோலைகள் கடிதங்கள், சாஸனங்கள் இவையாதிய உளவோ என்று ஆய்ந்து, உளவாயின், அச்சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு இறந்தகாலத்தைக் காட்டுவான். இலக்கியத் துறையிலே படிபவன் ஒருவன்பண்டைக் காலத்து இலக்கியத்தில் அக்காலத்தைப்பற்றி யாதேனுக் காணின், தேச சரித்திரவல்லார் அக்காலத்தைப் பற்றிச் செய்துள்ள முடிபுகளுடன் இலக்கியம் சொல்வதை ஒட்டிட்டு நோக்கி, முதலாவதாக, இலக்கிய நூல்களுக்குக் காலவரையறை விதிக்கலாம்; இரண்டாவதாக, அந்நூல்களின் இலக்கிய நலங்களை உய்த்துணரப் பின்னுமொரு வழியமைக்கலாம். ஈதன்றிச் "தேச சரித்திர ஆராய்ச்சிவாண! நீ உரைப்பது தவறு. இலக்கிய நூல்களில் உள்ள சான்றுகள் பலநின துரையைத் தழுவியில. பொய்யனுயினுய்," என்று மொழிய இலக்கிய வலவனுக்கு வாயில்லை; நம்பத்தகுந்த தேசசரித்திரம் இன்றெனின், ஒரு காலத்தின் இலக்கியமே அக்காலத்துச் சரித்திரம் என்று கொள்ளவும் இடனில்லை. ஏனெனில், இலக்கியமும், நாட்டு வரலாறும்(History) பொதுவாக மனித சமூகத்தைப் பற்றியே பேசும் அறிவின் பகுதிகள் எனினும், அவைதமுள், நோக்கங்களிலும், கையாளும் முறைகளிலும் காண்கின்ற பேதம் கொஞ்சமன்று. (தொடரும்).

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவாந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பாவர்கள் மனத்திற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச் செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம் பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும் வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0.

மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] ஆங்கில ஆசான் [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறாது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A.,B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம்,
வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

உபயோகமுள்ள வெள்ளிக் கலன்களால் உங்கள் மனைகளை அலங்காரஞ் செய்யுங்கள்.

வெள்ளி நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் வெள்ளி நாணயங்களும் மாந்தர்தம் நல்வாழ்வின் வளர்ச்சியுடன் எக்காலத்திலும் சேர்ந்து வருகின்றன.

சுராஜ்மல் வெள்ளிக் கலன்கள் வெள்ளி வேலைக் கலையின் முதிர்ச்சியைக் காட்டி நிற்றலால் அவை நன்கொடை அளித்தற்கு உரியன. உலோகத்தின் மேன்மையும், வேலைப் பாட்டின் பெருமையும் அமைந்திருக்கும் சுராஜ்மல்லின் வெள்ளி எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்விடத்திற்கும் ஏற்றதா யிருக்கின்றது. நல்ல வெள்ளிச் சாமான்களை வைத்திருப்பதுபோல் திருப்தியுடையது வேறில்லை. நன்கொடைக்குஏற்றது

எங்களுடைய வெள்ளிக் கலன்களெல்லாம் சுத்தமான உலோகத்தால் செய்தவை. அவைகளின்மீது எங்கள் டையமண்ட் டிரேட் மார்க் இருக்கும். தேர்ச்சிபெற்ற வேலைக்காரர்களின் கைவேலை அவை. ஒவ்வொன்றும் அழகின் அதிசயம். தனக்குநிகர் தானே என்னும் படி அமைந்திருக்கின்றது.

கணக்கற்ற சாமான்களைச் செய்து தயாராக வைத்திருக்கிறோம். ஆதலால் வீட்டின் உபயோகத்திற்கேனும் வெகுமதி கொடுப்பதற்கேனும் உங்களுக்கு வேண்டியதை எளிதில் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடும்.

வேண்டுவோர்க்கு மாதிரிகளும் விலைகளும் அனுப்புவோம்.

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி.	359, கலபாதேவி ரோட், பம்பாய்.	**134**, மோகல் தெரு, ரங்கூன்.	12, லால்பஜார் கல்கத்தா.	**313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY.	359, Kalladvi Road BOMBAY.	134, Mogul Street, RANGOON.	12, Lal Bazaar CALCUTTA.	313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்

ஆகாயவிமானம்:-இங்கிலாந்திற்கும்இந்தியாவிற்கும் இம்மாத முதலிலிருந்து ஆகாய மார்க்கமாய்த் தபால்களும் பிரயாணிகளும் போக்குவரவிற்குரிய ஆகாய விமானங்கள் ஏற்பட்டுவிட்டன. வழியில் பதினெட்டு இடங்களில் இறங்குமாயினும் ஏழே நாளில் பிரயாணத்தை முடித்துவிடலாம். வாரம்வாரம் கராச்சியிலிருந்து லண்டனுக்கு ஒரு விமானமும், லண்டனிலிருந்து கராச்சிக்கு ஒரு விமானமும் புறப்படும். பிரயாணக்கட்டணம் ஆளொன்றிற்கு நூற்றுமுப்பது பவுனாகும்.

***

இந்தியா சட்டசபையில் பாம்:-எட்டாந்தேதியன்று, பொதுஜனக்காப்பு மசோதாவைச் சட்டசபையில் ஆலோசிப்பதைப்பற்றிச் சட்டசபைத் தலைவர் தம்முடைய முடிவான தீர்ப்பைச் சொல்வதற்கு எழுந்தபோது காலிரியிலிருந்து இரண்டு பாம்கள் எறியப்பட்டுச் சபாமண்டபத்தின் நடுவே விழுந்தன. ஒருவருக்கும் உயிர்ச்சேதம் இல்லை. சிலர் காயப்பட்டனர். இதனால் மிகவும் குழப்பம் ஏற்பட்டு எல்லாரும் பரபரப்புடன் வெளியகன்றனர்.

***

இராஜபால் கொலை:—ஆர்யசமாஜ ஊழியரும் 'ரங்கிலா ரசூல்' என்ற புத்தகத்தின் ஆசிரியருமான ஸ்ரீ இராஜபால், இந்தமாதம் 6-யன்று லாகூரில் தனது கடையில் தனியாகப் படுத்துக்கொண்டிருக்கும்போது ஒருவனால் குத்திக் கொல்லப்பட்டார். இப்படிக் குத்திக்கொன்றவன் "ஓ, மகம்மதிய சகோதரர்களே, எனது ரசூலின் பழியைத் தீர்த்துவிட்டேன்" என்று கூவிக்கொண்டு போனதாகவும் அவனைச் சிலர் பின்பற்றிப் பிடித்துப் போலீசார்வசம் கொடுத்துவிட்டதாகவும் தெரிகின்றது. ஸ்ரீ இராஜபாலின் சவத்தைச் சோதனை செய்தபிறகு அதனை ஊர்வலம் கொண்டுபோவதற்குக் கணக்கற்ற ஜனக்கூட்டம் காத்துக்கொண்டிருந்தது. ஆனால் போலீஸார் இதுவிஷபமாய் யாவரும் எவ்விதக் கூட்டமும் கூடப்படாது என்றுஉத்தரவிட்டும் கூட்டம் கலையவில்லையாகையால் அவர் தடிகொண்டடித்துக் கூட்டத்தைக் கலைக்க வேண்டி நேர்ந்தது. இதனால் நூறுபேர் வரையில் காயப்பட்டனர்.

***

இராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார்:—அவர்களுக்கு நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தமது உவகையைத் தெரிவித்து உபசாரம் செய்த வைபவம் 7-யன்று கோவிலூரில் இனிதின் நிறைவேறியது. அச்சமயம் ரைட்ஹானரபில் வி. எஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் தலைமைவகித்தார். நாட்டுக்கோட்டைச் சீமான்களும், மற்றும் இவ்விராஜதானிப் பிரமுகர்களும் கணக்கிறந்தோர் கண்கொள்ளாக் காட்சியாய் அலங்கரிக்கப் பெற்றிருந்த அவ்வூரில் விஜயஞ் செய்திருந்தனர். டி. யன். முத்தைய செட்டியாரவர்கள் உபசாரப் பத்திரத்தைப்படித்து அதனை மிகவும் அலங்காரமானவொரு பொன்பெட்டியில் வைத்துக் கொடுத்தனர். ஸ்ரீமான் எ. இராமசுவாமி முதலியார், ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார், ஸ்ரீமான் வி. வி. வெங்கடரமண ஐயங்கார், ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸஐயங்கார் முதலானவர்கள் இராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரையும், ரைட் ஹானரபில் வி. ஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரையும் புகழ்ந்து பேசினர்.

ஸ்ரீமான் இராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் பெறுதற்கரிய இந்தப் பட்டத்தைப் பெற்றபின் முதல்முதல் தம்முடைய பிறந்த வூராகிய கானாடுகாத்தானுக்கு 5-ந்தேதியன்று வந்தனர். அச்சமயம் அவ்வூர் மிக்க அலங்காரத்துடன் அவரைத் தக்கபடி வரவேற்றது. நகரத்தார் சார்பாக ஸ்ரீமான் C V.R.M. இராமசுவாமி செட்டியாரவர்கள் உபசாரப்பத்திரம் தந்தனர். அதன்பிறகு யூனியன்போர்ட் தலைவரான ஸ்ரீமான் S. R. M. C. T. சபாரத்னம் செட்டியாரவர்கள் அவ்வூர் யூனியன்போர்ட் சார்பாக வொரு உபசாரப்பத்திரம் கொடுத்தனர். அந்தப் பத்திரத்தில், "ஐய, உமது மூதாதையோர் சிதம்பரத்தில் கடவுளர்க்குக் கோவில்களைக் கட்டினர். அதற்கருகில் நீவர் கல்விக்கு இப்பெருங்கோயிலைக் கட்டினீர். இனி எந்நாளும் தலைமுறை தலைமுறையாய்க் கல்வியை ஆதரித்தவர்களில் நுந்தமிற் பெரியோர் இருந்திலர் எனக் கொண்டாடுவார்" என்று இராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் நன்கொடை மிகவும் அழகாய்ப் பாராட்டப் பெற்றிருக்கின்றது.

***

மதிப்புரை.

மாதவ கோவிந்த சதகம்

திரு. அரங்கதாஸரவர்களால் இயற்றப் பெற்று இரங்கோனில் பிரசுரமா யிருக்கின்ற இப்புத்தகம் வரப்பெற்றோம். குமரேச சதகம்போல் பற்பல விஷயங்களைப்பற்றி ஆசிரிய விருத்தத்தில் பாடப் பெற்றிருக்கின்ற இந்நூலினை நன்கு புகழ்ந்து "சுதந்தரன்" ஆசிரியர் ஸ்ரீமான் சு. நா. சுந்தரன் ஒரு முகவுரையும்,ரங்கூன் உயர்தர கலாசாலை ஆசிரியராகி எஸ். வீ. காளிதாஸர் பீ. ஏ. ஒரு அணிந்துரையும் வரைந்துளர்.

புத்தகம் வேண்டுவோர் N. T. R. Naidu, Minywa P. O. Pegu Dist. Burma, என்னும் விலாசத்திற்கு 5 அணாத் தபால்தலை யனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தனவணிகர் நாட்டிலிருக்கும் எமது நண்பர்களுக்குச் சென்ற ஆண்டு பைண்டு வால்யூம் தேவையாயிருக்குமாயின் அவர், விளம்பரவிலைக்குக் கோத்தமங்கலம் ஸ்ரீமான் இராமசுப்ரமணியம் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2-0-0

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஊப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வேயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஆரியன் புக் டிபோ,

நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

"ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது- மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11. VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

189050

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)